விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: எட்டு

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2038 மார்கழி 13 சனிக்கிழமை (29.12.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 010




## போர் நடவடிக்கைகளின் மூலம் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது

### அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைத் திருப்திப்படுத்தும் நிலையான-என்றும் நிலைக்கும் நியாயமான அரசியல் தீர்வைக் காணுக் கூடிய சமாதானப் பேச்சுவார்த்தையை எவ்வித தாமதமுமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

யுத்தத்தின் மூலம் சமாதானம் பிறக்க வழிகிட்டாது என அகில இலங்கை இந்துமா மன்றம் தெரிவித்துள்ளது.

கடந்த 25 ஆம் திகதி கொழும்பு பம்பலப்பிட்ட சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்ற அகில இலங்கை இந்துமா மன்றத்தின் வருடாந்த கூட்டத்தில் கலந்து கொண்ட அங்கத்தவர்கள் சங்கங்களினால் மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

மேலும் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் வருமாறு, யுத்த (08 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளராக இளங்கோ தலைவர் பிரபாவால் நியமிப்பு



தமிழீழ்க் காவல்துறைப் பொறுப்பாளராக கே.இளங்கோ கடந்த 19 ஆம் திகதியன்று விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனால் நியமிக்கப்பட்டுள்ளார்.

தமிழீழத் தேசியத் தலைவரால் 16 வருடங்களுக்கு முன்னர் தமிழீழ காவல்துறை உருவாக்கப்பட்டது. காவல் துறை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து 02.11.2007 வரை தற்போது அரசியல் துறைப்பொறுப்பாளராக இருக்கும் பா.நடேசன் அப்பதவியினை வகித்து வந்தார்.

தமிழீழப் பகுதிகளில் கடந்த 16 வருடங்களாக சட்டம், ஒழுங்கை நிலைநாட்டி தனது சிறப்பான சேவையை தமிழீழ காவல் துறை ஆற்றி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (எ-5)

# அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண

# ஹெல உறுமய - ஜே.வி.பி. கடும் எதிர்ப்பு

## ஒற்றையாட்சி மூலமான தீர்வுக்கே ஆதரவாம்

**(கொழும்பு)**

**இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண்பதற்கு ஜே.வி.பியும் ஜாதிக ஹெல உறுமயவும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவொரு தீர்வுக்கும் இணங்க மாட்டோம் என்றும் அக் கட்சிகள் தெரிவித்துள்ளன.** (08 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர் மேர்வின் சில்வா விவகாரம் பொலிஸ் அறிக்கையை ஏற்க நீதிபதி மறுப்பு

(கொழும்பு)

அமைச்சர் மேர்வின் சில்வாவினால் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்தியாளர் ஒருவர் வியாழன் அன்று தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் பற்றிய பொலிஸ் புலனாய்வு நடவடிக்கைகள் குறித்து நீதிபதி மக்கி முகமெட் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் இலங்கை எங்கிலும் உள்ள மக்களால் தொலைக்காட்சியில் நேரடியாக பார்க்கப்பட்டது என்பதால் அது குறித்து பொலிஸார் மிகவும் கரிசனையுடன் செயற்பட வேண்டுமென்று கொழும்பு குற்றவியல் நீதிபதி மக்கி முகமெட் எச்சரித்துள்ளார்.

இது தொடர்பில் ஒருவரை மாத்திரமே பொலிஸார் குற்றவாளியாக நீதிமன்றத்தில் நிறுத்தியுள்ளனர். ஆனால் இப்படியான ஒரு சம்பவம் நடைபெற்ற நிலையில் ஏன் ஒருவர் மாத்திரம் இவ்வாறு பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார் (08 ஆம் பக்கம் பார்க்க)

## ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்



(கொழும்பு)

தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சர் மேர்வின் சில்வா தனது ஆதரவாளர்களுடன் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்குள் அத்துமீறி அன்றாட நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவித்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கூட்டுத்தாபனத்தில் இருந்த வீடியோ நாடாக்களை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் எடுத்துச் (08 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்புச் சிறைச்சாலையில் கைதிகளுக்கிடையே மோதல்

### இருவர் படுகாயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு குழுக்களுக்கிடையே நேற்று முற்பகல் 11.15 மணியளவில் இடம்பெற்ற மோதலில் கைதிகள் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

சிறைச்சாலை வளாகத்தில் உள்ள கோயிலுக்குச் செல்வதற்காக கைதிகளை கூடங்களிலிருந்து திறந்து விட்டபோது இரு குழுக்களுக்குமிடையில் மோதல் ஏற்பட்டதாக மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர்.

15 பேர் கொண்ட கைதிகள் மீது 17 பேர் கொண்ட கைதிகள் கத்திகள், பொல்லுகள், கோடரிகள், வாள்கள் ஆகியவற்றினைக் கொண்டு தாக்குதல் நடத்தியதாகவும் இதனால் இரு கைதிகள் படுகாயமடைந்து ஆபத்தான நிலையில் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம் மோதல் சம்பவத்தால் சிறைச்சாலை வளாகத்தில் நேற்று பதற்றமும் பரபரப்பும் நிலவியது. (08 ஆம் பக்கம் பார்க்க)

## இந்.பிரதமரின் இலங்கைப் பயணத்திற்கு எதிராக சென்னையில் ஆர்ப்பாட்டம்

(சென்னை)

இலங்கையின் சுதந்திர தின விழாவில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் பங்கேற்பதை எதிர்த்துச் சென்னையில் டிசம்பர் 31 ஆம் திகதி கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் என்று திராவிடர் கழகம் அறிவித்துள்ளது.

சென்னையில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி நேற்று ஊடகவியலாளர்களிடம் கூறியதாவது, 2008 பெப்ரவரி 4 ஆம் திகதி அன்று வரவிருக்கும் இலங்கைத் தீவின் சுதந்திர நாளில் சிறப்பு விருந்தினராக இந்திய நாட்டின் பிரதமர் டாக்டர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளவிருக்கின்றார் என்ற செய்தி உலகம் முழுவதும் உள்ள தமிழர்களுக்கு மட்டுமல்ல மனித உரிமை, மனித நேயம் இவற்றின் மீது மதிப்பு வைத்துள்ள அனைவருக்கும் அதிர்ச்சி தரக் கூடியதாகும்.

ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்த 2005 ஆண்டுக்குப் பிறகு 3 (08 ஆம் பக்கம் பார்க்க)

## முகமாலை-கிளாலி-வவுனியாவில் படையினர்-புலிகள் நேற்று மோதல்

(கொழும்பு)

முகமாலை கிளாலி மற்றும் வவுனியா முன்னரங்கப் பகுதிகளில் நேற்றும் நேற்று முன்தினமும் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் படை வீரர் ஒருவர் கொல்லப்பட்டுள்ளதுடன் ஐவர் படுகாயமடைந்துள்ளனர்.

முகமாலை முன்னரங்கப் பகுதியில் நேற்றுக்காலை 6.15 மணியளவிலும் 9.30 மணியளவிலும் இடம்பெற்ற மோதல் சம்பவங்களில் படை வீரர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இதன்போது புலிகள் தரப்பில் நால்வர் கொல்லப்பட்டதாகப் படையினர் தெரிவித்தனர்.

வவுனியா முன்னரங்கப் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பல்வேறு மோதல் சம்பவங்களில் விடுதலைப்புலிகளின் தலைவியான சாவித்திரி உட்பட 16 பேர் கொல்லப்பட்டுள்ளதாகப் படைத்தரப்பினர் தெரிவித்துள்ளனர். இம் மோதல் சம்பவத்தில் படைத்தரப்பில் நால்வர் படுகாயமடைந்துள்ளனர்.

இதேபோன்று கிளாலி முன்னரங்கப் பகுதியில் நேற்று முன்தினம் பிற்பகல் 1.35 மணியளவில் இடம் பெற்ற மோதலில் படை வீரர் ஒருவர் (08 ஆம் பக்கம் பார்க்க)

# நத்தாரை முன்னிட்டு வறியகுடும்பங்களுக்கு படையினர் உணவுப் பொருட்கள் வழங்கல்



நத்தார்,புதுவருட தினங்களை முன்னிட்டு கடந்த 23ஆம்திகதி குருநகர்,பாசையூர், நாவாந்துறை ஆகிய கிராமங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 400 வறிய குடும்பங்ளுக்கு குடும்பத்துக்கு 1000ரூபாவுக்கு மேற்பட்ட அரிசி,பருப்பு ,சீனி,மிளகாய், தேயிலை ஆகிய உலர் உணவுப்பொருட்கள் அடங்கிய பொதிகளை 51 ஆவது சேனையகத்தின் கீழ் உள்ள பிரதேச தலைமையகம், படைப்பிரிவுகளில் உள்ள படையினரின் பங்களிப்பாக வழங்கியுள்ளது.

இவை யாழ்.பிரதேசத்தில் கடமையிலிருக்கும் இராணுவத்தினரின் அன்றாட உணவுகளிலிருந்து சேமிக்கப்பட்டவையாகும்.

யாழ்.பாதுகாப்பு படைகளின் தளபதி மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறியின் ஆலோசனையின் கீழ் 51ஆவது சேனாதிபதி சகல ஏற்பாடுகளையும் மேற்கொண்டார்.

இவ் உணவுப் பொதிகள் வழங்கும் நடவடிக்கை யாழ்.நகரத்திற்குப் பொறுப்பான இராணுவ அதிகாரியினால் மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளை மக்கள் மத்தியில் உரையாற்றும்போது இவ் உணவுப் பொருட்கள் யாழ்ப்பாணத்தில் சேவையாற்றும் பாதுகாப்புப் படையினரின் உணவுகளிலிருந்து சேமிக்கப்பட்ட ஒரு தொகையே.

இச்சந்தர்ப்பத்தில் உங்களுக்கு மனப்பூர்வமாக வழங்கப்படுவதுடன் இவ் உணவுப் பொருட்கள் மலரப்போகும், நத்தார், புதுவருடம் போன்றவற்றுக்கு அன்பளிப்பு செய்ய கிடைத்ததற்கு பாதுகாப்புப்படை அங்கத்தவர்களாகிய நாம் மிகவும் சந்தோசமடைவதாகவும் இதனால் இராணுவத்தினருக்கும் பொதுமக்களுக்கும் இடையில் புரிந்துணர்வும் நம்பிக்கையும் ஏற்படுத்த முடியும் என்றும் இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

உங்களுக்காக சேவையாற்ற கடமைப்பட்டுள்ள நாம் சந்தோசத்துடனும் சமாதானத்துடனும் பிறக்கும் நத்தார் தினத்திற்கு வாழ்த்துத் தெரிவிப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார். (அ)

## நிறுவனத் தலைவர்களுக்கான கண்காணிப்புக் குழுக்கூட்டம்

யாழ் சுகாதார திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் தவறாது சமுகமளிக்குமாறு நிறுவனத் தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் யாழ். சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கேட்டுக் கொண்டுள்ளார். (அ)

## விருது வழங்கலும் பாராட்டு விழாவும்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் தெற்கு இந்து இளைஞர் மன்றம் சமய, சமூக சேவையில் சிறப்பாக பணியாற்றியமையைக் கௌரவித்து வழங்கிய, இவ்வாண்டுக்கான சமூகச்சுடர் விருதைப் பெறும் பொன்னுத்துரை கமலநாதனின் சேவையைப் பாராட்டி எடுக்கப்படும், சமூகச் சுடர் விருது வழங்கலும், பாராட்டு விழாவும், இன்று சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு சுன்னாகம் தெற்கு முத்தமிழ் மன்றத்தில் மன்றத் தலைவர் சு.சிறிக்குமரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

விழா ஆசியுரையை சுன்னாகம் சிறி பூதவராயர் தேவஸ்தான பிரதமகுரு சிவசிறி கி.சோதீஸ்வரக்குருக்கள், பிரம்மஸ்ரீ ச.பரமேஸ்வர சர்மாவும் வழங்குவர். (ச-6)

## கலாபூஷண விருது

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் கலாபூஷண விருதுக்காக தெரிவு செய்யப்பட்டு கடந்த 15 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் கலந்து கொள்ளாத கலைஞர்களுக்கான விருதுகள் நாளை மாவட்ட செயலகத்தில் நடைபெற இருக்கும் கலை, கலாசார பேரவை செயற்குழுக்கூட்ட நிகழ்வில் வழங்கப்படும் எனவும்,அன்றைய தினம் பின்வரும் கலைஞர்களை தவறாது சமுகமளித்து தமக்குரிய விருதுகள், சான்றிதழ்கள், காசோலைகளை பெற்றுக்கொள்ளுமாறு அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

விருது பெறுவோரின் விபரம் வருமாறு,

சீ.சண்முகவடிவேல் (ஏழாலை மேற்கு சுன்னாகம்), நீ.வின்சென்டி போல் (74/3 கடற்கரை வீதி, நாவாந்துறை), செ.வரதராஜன் (நாமகள் ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு), செ .டானியல் பொலிக்கன் (7/2 2ஆம் குறுக்குத்தெரு, நாவாந்துறை) வே.சுந்தரலிங்கம் (61 மருதடிவீதி, யாழ்ப்பாணம்), மு.கோபாலகிருஷ்ணன் (646 கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்). (அ)

## பொதுக்கூட்டமும் பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

சமூக அபிவிருத்தி மன்றத்தின் பொதுக் கூட்டமும் சமாதானம், சாந்தி வேண்டி பிரார்த்தை நிகழ்வும் இன்று காலை 9.30 மணிக்கு மன்றக் காரியாலயத்தில் நடைபெறும். மன்றத் தலைவர் திருமதி நவநீதன் ஜெகதீசன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மரியன்னை பேராலய உதவித்தந்தை அருட் திரு.எட்வினாதன் கலந்து கொள்கிறார். (ச)

## கலை கலாசாரப் பேரவை செயற்குழுக் கூட்டம்

மாவட்ட கலை கலாசார செயற்குழுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர்களை தவறாது கலந்து கொள்ளும்படி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். (அ)

## குருமார்களுக்கு அடையாள அட்டை

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் குருமாருக்கான அடையாள அட்டை ஒரு தொகுதி யாழ்.பிராந்திய அலுவலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளது.

எனவே உரியவர்கள் வந்து அதனைப் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட இணைப்பாளர் கே.தெய்வேந்திரம் கேட்டுக்கொண்டுள்ளார். (ச)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வடமராட்சி வலயத்திலுள்ள குடத்தனை அ.மி.த.க. பாடசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், அல்வாய் வடக்கு இ.த.க. பாடசாலை,தம்பசிட்டி மெ.மி.த.க.பாடசாலை ஆகியவற்றுக்கான அதிபர் பதவி வெற்றிடமாக உள்ளது.

பொருத்தமானவர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார். (ச-19)

## இராசிபலன்

29.12.2007
(மார்கழி 13,சனிக்கிழமை)
ஷஷ்டி பின்னிரவு 03.15மணிவரை
பூரம்,சித்தம் பின்னிரவு 05.07 மணிவரை
இராகுகாலம் 09.28-10.58 மணிவரை
சுபநேரம்-03.28-04.58 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | காரிய இடையூறு, புத்திரரால் கவலை, தனவிரயம், வியாபார நன்மை. |
| இடபம் | அற்பர் உறவு, ரோகபயம், கல்வியில் ஆர்வம், முயற்சி தாமதம். |
| மிதுனம் | இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள்சேர்க்கை, காரியசித்தி. |
| கடகம் | மதிப்புக்குறைவு, பொருள்விரயம், காரிய தாமதம், ரோக பயம். |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, நண்பர்கள் உதவி, சயன சுகம், புதிய முயற்சி. |
| கன்னி | உஷ்ண நிலை, பணவிரயம், தந்தை வழி உறவு, முயற்சி தாமதம். |
| துலாம் | தொழில் சிந்தை, மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், போசன சுகம். |
| விருச்சிகம் | பெரியோர் உதவி, சுபநிகழ்வு, கடின முயற்சி, அதிகாரம். |
| தனுசு | உடல் உழைப்பு, அச்சமான நிலை, வயிற்றுக்கோளாறு, நிலைமாற்றம். |
| மகரம் | எதிர்பாராத அச்சம், காரிய தடங்கல், போசன சுகம், அபகீர்த்தி. |
| கும்பம் | வாகன வசதி, அபூர்வ சந்திப்பு, பண வருவாய், முயற்சி கைகூடும். |
| மீனம் | சுகவாழ்வு, திடீர்பயணம், காரிய நன்மை, போசன சுகம். |

வளவன்







யா/ இந்துமகளிர் ஆரம்பப் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணப் பிறவுண்வீதி எவர்சைன் முன்பள்ளிப் பாலர்களின் கலைநிகழ்வுகளையும், பிரதம விருந்தினரான யாழ்.பல்கலைக்கழகத்தின் இந்து நாகரிகத்துறை தலைவர் கலாநிதி வேதநாதன் உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.


# 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் செல்லையா சிவஞானசுந்தரம் (B.A.Dip in Ed.)**

வடமராட்சி முதியோர் நலன்புரி கூட்டுறவுச் சங்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவராக, செயலாளராக , உள்ளக கணக்காளராக முன்னின்று உழைத்து இளைப்பாறிய உப அதிபர் (வேலாயுதம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை) அமரர் செல்லையா சிவஞானசுந்தரம் B.A.Dip in Ed. அவர்களை இழந்து தவிக்கும் மேற்படி சங்கம் சிரம்தாழ்த்தி கரம் தூக்கி உளமார அஞ்சலி செலுத்துகின்றது.

மாலிசந்தி, நெல்லியடி கிழக்கு,
கரவெட்டி.
29.12.2007

உறுப்பினர்கள்
வடமராட்சி முதியோர்
நலன்புரி கூட்டுறவு சங்கம்.

(708)

# இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி

இடம் : இளங்கலைஞர் மன்றக் கலாமண்டபம்
காலம் : 30.12.2007 ஞாயிறு பி.ப.2.30
தலைமை : திரு.க.சோமசேகரம் J.P.

**நிகழ்ச்சிகள்**

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் வழங்கும்

- மிருதங்க இசை -மாணவர் நிகழ்ச்சி
- தமிழிசை -கருணைச் செல்வி கணபதிப்பிள்ளை
- இசைக்கச்சேரி - சத்தியாம்பாள் தர்மலிங்கம்
- நாட்டியாஞ்சலி -ஆசிரியைகளும் மாணவர்களும்

**அணிசெய் கலைஞர்கள்**

வயலின் : A.ஜெயராமன்
கிருஷ்ணாலினி மயில்வாகனம்
மிருதங்கம் : M.சிதம்பரநாதன்
மகேந்திரன் லோகேந்திரன்
S.விமல்சங்கர்
கெஞ்சிரா : வி.சிவமூர்த்தி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

**இளங்கலைஞர் மன்றம்**

(C/641)

## இன்று ஒரு தகவல்

# வாய்ச் சவடால்

''இந்த உலகத்தை வில்லாக வளைக்க வேண்டுமா? மணலைக் கயிறாகத்திரிக்க வேண்டுமா?'' அது என்னால் முடியும் சார் என்று வாய்ப்பந்தல் போடுகிறவர்களுக்கு என்ன பெயர் தெரியுமா? வாய்ச் சவடால் பேர்வழி என்று பெயர். ஊரை வளைத்து வார்த்தையாலே பந்தல் போடுவதில் இவர்கள் கெட்டிக்காரர்கள். ஆனால் காரியத்தில் அவர்களால் ஒரு சதத்துக்குப் பிரயோசனம் இல்லை. இந்த உலகத்திலே இப்படிப்பட்டவர்கள் அனேகர் உண்டு.

ஓர் ஊரிலே இப்படிப்பட்டவர்கள் மூவர் இருந்தார்களாம். என்னுடைய கண்பார்வை ரொம்பக் கூர்மை என்றான் ஒருவன். "என்னுடைய பார்வை அதைவிடக் கூர்மை" என்றான் மற்றவன். ''என்னுடைய கண்பார்வை உங்கள் இரண்டுபேர் பார்வையை விடக் கூர்மையானது! எவ்வளவு தூரத்தில் எது இருந்தாலும் அதை என்னாலே பார்த்துவிட முடியும்!'' என்றான் மூன்றாவது ஆள்! இந்த வாய்ச்சவடால் பேர்வழிகள் மூவரும் ஊரிலே போகிறவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்து அளந்து கொண்டேயிருப்பார்கள். இவர்களுடைய அலட்டல் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருந்தது. ஜனங்களால் இதைச் சகிக்கவே முடியவில்லை. இவர்களுடைய அலட்டலை எவ்வாறு அடக்குவது என்று யோசித்தார்கள். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்கள்.

அந்த ஊரவர்கள் அவர்கள் மூவரையும் கூப்பிட்டார்கள். ''இதோ பாருங்கள்...! நமது ஊரிலே புதிதாகக் கட்டியிருக்கிறோமே சிவன் கோவில். அதன் கோபுர உச்சியிலே கலசம் வைப்பதற்காக ஒரு பீடக்கல்லை நாளைக்கு ஏற்றப்போகிறோம். அந்தக் கல்லிலே ஒரு வாசகம் பொறிக்கப் போகிறோம். நீங்கள் நாளை காலை இதே இடத்தில் இருந்தபடியே அந்தப் பீடக் கல்லிலே என்ன பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்துச் சொல்ல வேண்டும். முடியுமா உங்களாலே?" என்று கேட்டார்கள். "முடியுமாவா?" எங்களை என்னவென்று நினைத்துவிட்டீர்கள். அந்தப் பீடக் கல்லிலே என்ன வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது என்பதை துல்லியமாக கூறிவிடுவோம். அதன் பின்னராவது நீங்கள் எங்கள் திறமையை ஒத்துக்கொள்ளாமல் இருக்க முடியாது என்றார்கள் அவர்கள்.

அந்த மூன்று பேரும் என்ன சொன்னார்கள் தெரியுமா? ஒருவனுக்கு ஒருவன் தெரியாமல் அந்த மூன்று பேரும் அந்தக் கல்லைச் செதுக்கும் சிற்பியைத் தேடிப்போனார்கள். முதலில் போனவன் அந்தச் சிற்பியைப் பார்த்து ''ஐயா... அந்தப் பீடக் கல்லிலே என்ன பொறித்திருக்கிறீர்கள்...'' என்று கேட்டான். "அன்பே சிவம்" என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது என்றார். சிற்பி இதை ஏற்றுக்கொள்ளுங்கள் என்று சிற்பி கையிலே ஐந்நூறு ரூபாவை வைத்தான் முதல் ஆள். அவன் போனபின் இரண்ராவது ஆள் வந்தான்... உச்சிக்கல்லிலே என்ன பொறிக்கப்பட்டிருக்கிறது என்று விசாரித்தான். ''அன்ப சிவம் என்று பொறிக்கப்பட்டிருக்கிறது'' என்றார். சிற்பி வேறு ஒன்றும் இல்லையா? என்ற கேட்டபின் இவன் சொன்னவர் திருமூலர் என்று கீழே பொறிக்கப்பட்டிருக்கிறது என்றார் சிற்பி. இதை ஏற்றுக்கொள்ளுங்கள்" என்று சிற்பி கையிலே ஆயிரம் ரூபாவை வைத்தான் இரண்டாவது ஆள். அவன் போன பின் மூன்றாவது ஆள் வந்தான். விசாரித்தான் "அன்பே சிவம்–சொன்னவர் திருமூலர் எனப் பொறிக்கப்பட்டிருக்கிறது என்றார் சிற்பி." அதற்குக் கீழே வேறு ஏதாவது பொறிக்கப்பட்டிருக்கிறதா? என்று கேட்டான் இவன் உபயதாரர் உலக நாதன் என்று பொறிக்கப்பட்டிருக்கிறது என்றார் சிற்பி. "இதோ இதைப் பிடியுங்கள்" என்று சிற்பிகையில் ஆயிரத்துஐந் நூறு ரூபாவை வைத்தான் மூன்றாவது ஆள்.

மறு நாள் காலை ஆலயத்துக்கு முன்னால் எல்லாரும் கூடியிருந்தார்கள். முதலாவது ஆள் நிமிர்ந்து கோபுர உச்சியைப் பார்த்தான். "அன்பே சிவம் என்று எவ்வளவு அழகாகப் பொறிக்கப்பட்டிருக்கிறது பாருங்கள்" என்றான். உன் கண்ணுக்கு அது தான் தெரிந்ததா? அதற்குக் கீழே சொன்னவர் திருமூலர் என்று பொறிக்கப்பட்டிருக்கிறதே? தெரியவில்லையா? என்றான் மற்றவன். மூன்றாவது ஆள் வந்தான். ''உங்கள் பார்வையின் கூர்மை இவ்வளவு தானா? என அலட்சியமாகச் சிரித்தான்'' "இந்த இரண்டு வாசகங்களின் கீழே உபயதாரர்–உலக நாதன்" எனச் சிறிய எழுத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறதே–அது உங்கள் பார்வையில் படவில்லையா? இவ்வளவுதானா உங்கள் பார்வையின் கூர்மை என அலட்சியமாகச் சிரித்தான் மூன்றாவது ஆசாமி!

"எப்படி நாங்கள் சொன்னது சரியா என மேலே ஏறிச் சென்று பார்த்துவிட்டு வாருங்கள்'' என்றார்கள் மூவரும் ஒரே குரலில். இதைக் கேட்டதும் கீழே நின்ற ஊரவர்கள் விழுந்து விழுந்து சிரிக்க ஆரம்பித்தனர். "மேலே ஏறிப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை" என்றார்கள்.

"ஏன்?'' என்று கேட்டார்கள் அவர்கள் அதற்கு அந்த ஊர்த் தலைவர் பதில் சொன்னார் ''ஏனென்றால் அந்தச் சிலாசனக் கல்லை இன்னமும் கோபுர உச்சிக்குக் கொண்டு போய்ப் பொறிக்கவில்லை... இன்னும் கொஞ்ச வேலை பாக்கியிருப்பதால் நாளைக்குத்தான் மேலே கொண்டு போய் வைக்கப்போகிறோம்... அப்படியிருக்க அந்த சிலாசனக் கல்லும் அதில் பொறிக்கப்பட்டிருந்த வாசகங்களும் எப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

இப்படிச் சொன்ன ஊர்த் தலைவர் திரும்பிப் பார்த்தார். அந்த வாய்ச்சவடால்பேர்வழிகளை அந்த இடத்திலேயேகாணவில்லை?

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டியது ஜனாதிபதியே தவிர சுதந்திரக்கட்சியல்ல

## ஐ.தே.க.சாடல்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தில் செய்தி பணிப்பாளர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை வன்மையாக கண்டித்துள்ள ஐக்கிய தேசியக்கட்சி நாட்டிலுள்ள சட்டத்தின் கீழ் அமைச்சரை கைதுசெய்யுமாறு கோரிக்கை விடுத்துள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தாக்குதல் நடத்திய அமைச்சரை கைதுசெய்வது மட்டமல்லாது அவர் வகிக்கின்ற சகல பதவிகளிலிருந்தும் நீக்கிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதுகாப்பு பிரிவின் பிரதானியான ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

அமைச்சர் மேர்வின் சில்வா இந்நாட்டின் சுயாதீன ஊடகத்திற்கு எதிரான நடவடிக்கையை மேற் கொண்டது இது முதல் தடவையல்ல என்பதுடன் அமைச்சர் தனது அச்சுறுத்தலை இம்முறை அரசாங்கத்தின் ஊடகமான இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் மீது காட்டியுள்ளார்.

இந்த சம்பவம் ஊடக சுதந்திரத்திற்கே பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. என்பதனால் ஊடக சுதந்திரம் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளது. இவ்வாறான செயற்பாடு களில் ஈடுபட்டுள்ள அமைச்சருக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது தொடர்பில் நாட்டுமக்கள் அவதானித்துக்கொண்டிருக்கின்றனர்.

அமைச்சரொருவர் பிழை செய்கின்ற போது அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கவேண்டியது நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியே தவிர ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மத்திய குழுவின் அதிகாரம் இல்லை. ஜனவரி மாதம் 2ஆம் திகதி கூடுகின்ற கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படும் என்ற அறிவிப்பு சம்பவத்தை திசை திரும்புவதற்கான உத்தியாகும். (அ-5)

# தொடரும் எறிகணை வீச்சுத் தாக்குதலால் பாடசாலைகள் - வணக்கத்தலங்கள் சேதம்

மன்னார் பெரிய பண்டி விரிச்சான் பகுதி மீது தொடர்ச்சியான எறிகணை வீச்சுத் தாக்குதல் காரணமாக பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் என்பன கடுமையாகச் சேதமடைந்துள்ளன.

தொடச்சியான எறிகணைத் தாக்குதல் காரணமாக அப் பகுதியில் 27 வரையான வீடுகள் முற் றாக சேதமடைந்துள்ளதுடன் பெரிய பண்டி விரிச்சான் மகாவித்தியாலய வகுப்பறை கட்டடத்தொகுதி, பாடசாலை நூலகம், விஞ்ஞான ஆய்வுகூடம் என்பன முற்றாக சேதமடைந்துள்ளன.

அத்துடன் அருட்சகோதரிகள் மடம், மரிய கொட்டி தேவாலயம், பண்டி விரிச்சான் பிள்ளையார் கோவில் என்பவற்றிலும் எறிகணைகள் வீழ்ந்து வெடித்துள்ளதுடன் கடுமையான சேதத்திற்கும் உள்ளாகியுள்ளனர். (அ-5)

## க.பொ.த உயர்தர

# கலை மற்றும் வர்த்தக பாடங்கள் ஆங்கில மொழிமூலம் அடுத்தாண்டு அறிமுகம்

சகல மாவட்டங்களிலும் இருந்து 50 பாடசாலைகளில் தற்போது நடந்து முடிந்த க.பொ.த.(சா.த) பரீட்சை பெறுபேறுகளின் அடிப்படையில் கலை மற்றும் வர்த்தக பாடங்கள் ஆங்கில மொழி மூலம் கற்பிக்கும் நடைமுறையை கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தவுள்ளது.

இவ்வருடம் அரசாங்கப் பாடசாலைகளிலிருந்து 4000க்கு மேற்பட்ட மாணவர்கள் ஆங்கில மொழி மூலம் க.பொ.த.(சா.த) பரீட்சைக்கு தோற்றி யுள்ளனர். அவர்களுக்கு க.பொ.த.(உ/த) த்திலும் ஆங்கில மொழி மூலம் கலை வர்த்தக பாடங்களை கற்பதற்கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க உள்ளதாகவும் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் மாநாட் டில் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த கூறியுள்ளார்.

அதற்கான ஆசிரியர்கள் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களுக்கான பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டுவருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார். ஜனவரி 20 இல் பிரபல பாடசாலைகளில் மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரிட்சையில் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் அனுமதிக்கப்படுவார்கள் என புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப்புள்ளி பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

புலமைப்பரிசில்கள் பெறுநரின் எண்ணிக்கையை 10,000 இல் இருந்து 15.000 ஆக அதிகரிக்க உள்ளதாகவும் அவர் கூறினார். பிரபல பாடசாலைகளில் கல்விபயிலும் அநேகமாணவர்கள் இப்பரீட்சைக்கு தோற்றாமலே உள்ளனர். ஆனால் அமைச்சு அடுத்த வருடத்திலிருந்து சகல மாணவர்களும் கட்டாயமாக இப்பரிட்சைக்கு தோற்ற வேண்டும் என அறிவுறுத்தும் எனவும் கூறினார்.

பிரபல பாடசாலைகளில் கற்போர்களுக்கு பாடசாலை அனுமதிக்கு இப்புள்ளி அவசியமில்லை என நினைத்து பரீட்சைக்குத் தோற்றாமல் இருக்கலாம், ஆனால் இம் மட்டத்தில் அவர்களின் கல்வித் தரத்தை மதிப்பீடு செய்வதற்கு இப்பரீட்சை தோற்றுவது கட்டாயமாகும். நாடு முழுவதும் ஒவ்வொரு வருடம் 305,000 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

# ஜப்பான் புகைப்படக் கண்காட்சியில் பங்குபற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு

யுனெஸ்கோ அமைப்பின் ஆசிய பசுபிக் கலாசார நிலையத்தினால் நடத்தப்படவுள்ள ஆசிய பசுபிக் புகைப்பட கண்காட்சிப் போட்டியில் இலங்கை மாணவர்களின் படைப்புகளையும் பங்கு பெறச் செய்வதற்கு கல்விய மைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

''எமது வாழ்க்கைக் கலாசாரத்தைக் கொண்டாடுவோம்'' எனும் தொனிப் பொருளில் இந்தப் புகைப்படக் கண் காட்சி ஜப்பானில் நடை பெறவுள்ளது. இது தொடர்பாக நாட்டின் சகல வலயக் கல்வி அலுவலகங்களுக்கும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

ஆதலால் வலயக் கல்வி அலுவலகங்களுடன் தொடர்புகொண்டு இது தொடர்பான தகவல்களைப் பெற்று இப் போட்டியில் பங்குபற்ற முடியும் என்றும் கல்வியமைச்சு அறிவி த்துள்ளது. இலங்கையின் சமூககலாசார விழுமியங்களைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் வடிவமைக்கப்பட்ட புகைப் படங்கள் இதற்காக கோரப்பட்டுள்ளன.

இப்போட்டியில் முதலாம் இடத்தைப் பெறும் ஆக்கத்திற்கு 1000 அமெரிக்க டொலர் பணப்பரிசும், இரண்டாவதாக தெரிவு செய்யப்படும் 12 புகைப்படங்களுக்கு தலா 250 அமெரிக்க டொலர்களும் பரிசாக வழங்கப்படவுள்ளதுடன், மூன்றாம் இடத்தைப் பெறும் படைப்புக்கு புகைப் பட சர்வதேச தகவல் புத்தகங்களும் வழங்கப்படவுள்ளன. (அ-5)

# வட-கிழக்கு கிராம அலுவலர்களுக்கு சம்பள நிலுவைகளை வழங்க ஏற்பாடு

வடக்கு கிழக்கு மாகாணங்களை சேர்ந்த கிராம அலுவலர்களுக்கான சம்பள நிலுவைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகிறது. பொது நிர்வாக அலுவல்கள் அமைச்சர் கருஜெயசூரியாவுடன் கடந்த மார்ச் மாதம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் பின்னரே இதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டதாக மாகாண கிராம அலுவலர்கள் சங்கத்தின் தலைவர் ப.வசந்தகுமார் தெரிவித்தார்.

மாகாணத்திலுள்ள மாவட்டங்களின் சங்க கிளையினர் தத்தமது பகுதிகளுக்குரிய அரச அதிபர்களுடன் தொடர்பு கொண்டு சம்பள நிலு வைகளை பெறுவது தொடர்பாக நடவடிக்கைகளை எடுக்க முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். நீண்டகாலமாக சம்பள நிலுவை பணம் வழங்கப்படாமல் வடக்கு கிழக்கு கிராம அலுவலர்கள் புறக்கணிக் கப்பட்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-5)





வலிகாமம் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவால் ஒழுங்கு செய்யப்பட்டு யா/காட்டுப் புலம் அ.த.க. பாடசாலையில் இம் மாதம் 16ஆம் திகதி நடைபெற்ற வளர்ந்தோர் கல்வி செயலமர்வில் பிரதிக்கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் உரையாற்றுவதையும் முறைசாரக்கல்வி செயல்திட்ட அலுவலர் ந. சண்முகராஜா, பாடசாலை அதிபர் எஸ்.சிறிஸ்பரலிங்கம், ஆசிரியர் சி. குலசிங்கம் ஆகியோர் அமர்ந் திருப் பதை முதலாவது படத்திலும், செயலமர்வில் கலந்துகொண்டோரை இரண்டாவது படத்திலும் காண லாம்.

# துணிச்சல் மிக்க பெனாசீரின் சோக முடிவு!

இஸ்லாமிய நாடுகளிலேயே மக்களால் தேர்வு செய்யப்பட்ட முதல் பெண் பிரதமர் என்ற பெருமைக்குரிய பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர் பெனாசீர் பூட்டோ (54) நேற்று முன்தினம் ராவல் பிண்டியில் படுகொலை செய்யப்பட்டார். அரசியலில் துணிவு மிக்கவராக விளங்கிய அவரது வாழ்க்கை சோகமாக முடிந்துவிட்டது.



பெனாசீர் பூட்டோவின் தந்தையும் பாகிஸ்தானின் அதிபருமான ஜுல்பிகார் அலி பூட்டோவைப் போலவே இவரும் பாகிஸ்தான் அரசியலில் செல்வாக்கு மிக்கவராக இருந்தார். ஜுல்பிகார் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டார். பெனாசீர் பூட்டோவின் இரு தம்பிகளும் படுகொலை செய்யப்பட்டனர். தற்போது பெனாசீர் பூட்டோ தற்கொலைத் தாக்குதலில் பலியானார். 1953 ஜுன் 21ஆம் திகதி கராச்சியில் பிறந்த பெனாசீர்பூட்டோ தொடக்க கல்வியை பாகிஸ்தானிலும், கல்லூரிப்படிப்பை அமெரிக்காவின் ஹார்வாட் (1969), பிரிட்டனின் ஆக்ஸ் போர்ட் (1979) பல்கலைக்கழகங்களில் நிறைவு செய்தார்.

1979ஆம் ஆண்டு கொலைக்குற்றம் சாட்டப்பட்டு அவர் தந்தை தூக்கிலிடப்பட்டார். இதன் பின்னணியில் இருந்தவர் அன்றைய பாகிஸ்தான் அதி பர் ஜியா உல் ஹக். கல்லூரிப்படிப்பை நிறைவு செய்து விட்டு பாகிஸ்தான் திரும்பிய பெனாசீர் பூட்டோவுக்கு வீட்டுச் சிறை காத்திருந்தது. ஜியாவுக்கு எதிரான போராட்டங்களுக்கு அவர் துணிச்சலுடன் தலைமையேற்றார். இதனால் அவர் வீட்டுச் சிறையில் வைக்கப்பட்டார்.

அவரது தந்தை தூக்கிலிடப்படும் வரை அவரது சிறைக்காவல் தொடர்ந்தது. 1984இல் பிரிட்டன் செல்ல அனுமதிக்கப்பட்டார். பிரிட்டனிலிருந்த போதே பாகிஸ்தானின் மக்கள் கட்சியின் தலைவராக பொறுப்பேற்றுக்கொண்டார்.

எனினும் அதிபர் ஜியா உல் ஹக்கின் மறை வுக்கு பின்னரே அவரால் பாகிஸ்தான் திரும்ப முடிந்தது. 1987இல் ஆசிப் அலி ஜர்தாரியை திருமணம் செய்துகொண்டார். அதிபர் ஜியா உல் ஹக் விமான விபத்தில் கொல்லப்பட்ட பின்னர் நடந்த 1988 தேர்தலில் பூட்டோவின் கட்சி மிகப்பெரிய வெற்றி பெற்றது.

35ஆவது வயதில் பாகிஸ்தானின் முதல் பெண் பிரதமராக பெனாசீர் பூட்டோ பொறுப்பேற்றார். அப்போது ஊழல் குற்றச்சாட்டுகள் காரணமாக 20 மாதங்களிலேயே அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து நடந்த தேர்தலில் நவாஸ் ஷெரிப் வெற்றி பெற்றார்.

1993இல் இரண்டாவது முறையாக பாகிஸ்தானின் பிரதமராக பெனசீர் பூட்டோ பொறுப்பேற்றார். 1996 அவரது ஆட்சி மீண்டும் கலைக்கப்பட்டது. 1997ஆம் ஆண்டு ஊழல் குற்றச்சாட்டுகளால் அவரது கணவர் சிறையிலடைக்கப்பட்டதால் 1998ஆம் ஆண்டில்



நாட்டைவிட்டு வெளியேறி பெனாசீர் பூட்டோ டுபாய் சென்றார். இரு முறை பிரதமராக பெனாசீர் பூட்டோ பதவி வகித்துள்ளார்.

மக்களை கவர்ந்த அரசியல்வாதியாக திகழ்ந்த அவர் இரண்டாவது முறையாக ஊழல் குற்றசாட்டுக்களால் அவர் செல்வாக்கில் கொஞ்சம் சரிந்தது. 1999ஆம் ஆண்டு ஊழல் குற்றச்சாட்டுகளில் அவர் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை என்பதால் அவருக்கு தண்டனை வழங்கப்பட்டது. என்றாலும் அப்போது பிரதமராக இருந்த நவாஸ் ஷெரிப் மற்றும் நீதிபதியிடையே நடந்த உரையாடலின் ஓடியோ ரேப், நவாஸ் நீதிமன்றை நிர்பந்தித்தார் என்பது தெரிய வந்தது.

1999இல் முஷாரப் அதிகாரத்தை கைப்பற்றியதால் பெனாசீர் பூட்டோ, நவாஸ் ஷெரிப்பும் பாகிஸ்தானில் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டது. முஷாரப்பின் ஆட்சியை தொடக்கம் முதலே கடுமையாக விமாச் சித்து வந்தார் பெனாசீர்பூட்டோ. 2004இல் பெனாசீர் பூட்டோவுடன் பேச்சுவார்த்தை நடத்திய பின் கொலை, ஊழல் தொடர்பான குற்றச்சாட்டுகளில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த பெனாசீர் பூட்டோவின் கணவர் ஜர்தாரியை முஷாரப் விடுவித்தார். பாகிஸ் தானில் ஜனநாயகம் திரும்ப வேண்டும் என்பதில் பெனாசீர்பூட்டோ உறுதியாக இருந்தார்.

பெனாசீர் பூட்டோ, முஷாரப்புடன் செய்து கொண்ட ஒப்பந்தம் காரணமாக இந்த ஆண்டு ஒக்டோபர் 18ஆம் திகதி மீண்டும் பாகிஸ்தானுக்கு திரும் பினார். அவர் மீதான ஊழல் குற்றச்சாட்டுகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. அவர் நாடு திரும்பிய போது நடந்த பேரணியிலும் குண்டு வெடித்தது.

அதில் அதிர்ஷ்டவசமாக தப்பிய அவர் நேற்று முன்தினம் நடந்த பேர ணியில் கொல்லப்பட்டுவிட்டார். 1972ஆம் ஆண்டு காஷ்மீர் பிரச்சினையின் போது சிம்லா உடன்படிக்கைக்காக இந்தியா வந்த தந்தையுடன் முதன்முறையாக பெனாசீர் பூட்டோவும் இந்தியா வந்தார். அதன் பின் இரு முறை இந்தியா வந்திருக்கிறார். 2008 தேர்தலில் வென்று மீண்டும் அரியாசனம் ஏறி விடலாம் என்ற அவரது கனவு தகர்ந்து விட்டது. இன்னொரு அரசியல் படுகொலை நடந்துவிட்டது.

## பூட்டோ குடும்பத்தினரை துரத்தும் கொடூர மரணங்கள்

பெனாசீர் பூட்டோவையும் சேர்த்து பூட்டோ குடும்பத்தில் இதுவரை நான்கு பேர் கொடூரமாக மரணமடைந்துள்ளனர். பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ நேற்று முன்தினம் நடந்த தற் கொலை படை தாக்குதலில் கொல்லப்பட்ட சம்பவம் உலகம் முழுவதும் அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தான் அரசியலில் புகழ்பெற்ற பூட்டோ குடும்பத்தினர் இயற்கைக்கு மாறான வகையில மரண மடைவது வழக்கமாகி விட்டது.

பெனாசீர் பூட்டோவையும் சேர்த்து பூட்டோ குடும்பத்தில் இதுவரை



நான்கு பேர் கொடூரமாக மரணமடைந்துள்ளனர். முதலாவதாக பெனாசீர்பூட்டோவின் தந்தையும் முன்னாள் பிரதமருமான ஜுல்பிகார் அலி பூட்டோ கடந்த 1979இல் தூக்கிலிடப்பட்டார். பூட்டோ விடயத்தில் கருணை காட்டும்படி உலக நாடுகள் விடுத்த கோரிக்கையை தூக்கி எறிந்து விட்டு, அப்போதைய தற்காலிக அதிபர் ஜியா உல் ஹக், பூட்டோவை தூக்கிலிட உத்தரவிட்டார். சர்வதேச நாடுகளை உலுக்கிய இச்சம்பவத்தின் நினைவுகள் நெஞ்சைவிட்டு நீங்கும் முன் பூட்டோ குடும்பம் மீண்டும் ஒரு மரணத்தை எதிர்கொண்டது.

பூட்டோ இறந்து ஒரு ஆண்டுக்குள் பெனாசீர் பூட்டோவின் சகோதரர் ஷா நவாஸ் மர்மமான முறையில் பிரான்சில் கொல்லப்பட்டார். மூன்றாவதாக கடந்த 1996.இல் பெனாசீர் பூட்டோவின் மற்றொரு சகோதரர் மிர் முர்தாஷா கொலைசெய்யப்பட்டார்.

பொனாசீர் பூட்டோ பிரதமராக இருக்கும் போதே இந்த துயரம் நிகழ்ந்தது. தற்போது பெனாசீர் பூட்டோவும் கொல்லப்பட்டுள்ளார். பூட்டோ குடும்பத்தினரை கொடூர மரணங்கள் தொடர்ந்து துரத்தி வருவது பாகிஸ்தான் மக்களை அதிர்ச்சியில் உறைய வைத்துள்ளது.

## கொலைக்கார பகுதி

பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்ட பகுதி பாகிஸ்தான் வரலாற்றில் கொலைக்கார பகுதியாகவே கருதப்படுகிறது. ராவல் பிண்டி நகரில் லியாகத் பாக் பூங்கா பகுதி அருகே தான் பெனாசீர் பூட்டோ நேற்று முன்தினம் மாலை சுடப்பட்டு இறந்தார். பாகிஸ்தானின் முதல் பிரதமர் லியாகத் அலிகான் இந்த இடத்தில் தான் 1951ஆம் ஆண்டு அக்டோபரில் சுடப் பட்டு இறந்தார். இந்த பூங்கா அருகில் தான் பெனாசீர் பூட்டோ வின் தந்தை ஜுல் பிகர் அலி பூட்டோ தூக்கிலிடப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அமிர்தன்

## ராசி இல்லாத '9'

பெனாசீர் பூட்டோவின் போராட்டம் நிறைந்த வாழ்க்கையில் 9 என்ற எண் ராசியில்லாத எண்ணாகிவிட்டது. பெனாசீர் பூட்டோ பிறந்தது ஜுன் 21, 1953. எண் கணிதப்படி, 1953ஆம் ஆண்டின் கூட்டு தொகை 9 ஆகும். பெனாசீர் பூட்டோவின் தந்தையும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமருமான ஜுல்பிகர் அலி பூட்டோ பிரதமராக பதவி ஏற்றது 1971ஆம் ஆண்டு. இதனுடைய கூட்டுத் தொகையும் 9.

8 ஆம் ஆண்டு வெளிநாட்டு வாசத்துக்கு பின் பெனாசீர் பூட்டோ நாடு திரும்பியது அக்டோபர் 18, 2007. இதன் கூட்டுத்தொகை 9 ஆகும். கடைசி யாக பெனாசீர் பூட்டோ துப்பாக்கி குண்டுகளுக்கு பலி யான நாள் டிசம்பர் 27,2007, இதன் கூட்டுத்தொகையும் 9 ஆகிறது.

## சிதைந்த கனவுகள் !

துர்மரணம் என்பது சில குடும்பங்களைப் பிடித்த சாபக்கேடா அல்லது சில நாடுகளின் துரதிஷ்டமா என்று தெரியவில்லை. குறிப்பாக தெற்காசியாவைப் பொருத்தவரை பாகிஸ்தான், இலங்கை, பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் எதுவுமே படுகொலைகளுக்கும், கோரமான விபத்துகளுக்கும் முக்கியமான தலைவர்களைப் பலிகொடுத்த சரித்திரத்திற்கு விதி விலக்கல்ல. இந்த வரிசையில் நேற்றைய அதிர்ச்சி பெனாசீர் பூட்டோவின் படுகொலை!

தந்தை ஜுல்ஃபிகர் அலி பூட்டோவைத் தூக்கில் போட்டது முதலே அந்தக் குடும்பத்தை மரணம் தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. பெனாசீர் பூட்டோவின் சகோதரர் ஷவா நவாஸ், பிரான்ஸ் நாட்டில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார் என்றால் அவரது இன்னொரு சகோதரர் முர்சாவும், பெனாசீர் பூட்டோ பிரதமராக இருக்கும் போது 1996 இல் கொலை செய் யப்பட்டார் இப்போது சகோதரி யின் முடிவு...

பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் தனிப்பட்ட செல்வாக்குடன் திகழ்ந்த பூட்டோவின் குடும்பம், நிச்சயமாக பாகிஸ்தானின் சரித்திரத்தில் மிக முக்கியமான பங்கு வகித்தது என்பதை மறுக்க முடியாது.

அதிலும் குறிப்பாக, பெனாசீர்பூட்டோ வின் பதவிக்காலம் பல ஊழல் குற்றச்சாட்டுகளையும், அதிகார துஷ்பிரயோ கங்களையும் சந்தித்தன என்றாலும், வெளியுறவு விடயத்தில் அண்டை நாடுகளுடன் சுமுகமான உறவை வளர்த்துக்கொள்வதில் முனைப்புக் காட்டியது என்பதை மறுக்க முடியாது. சமீப காலத்தில் இலங்கை–பாகிஸ்தான் உறவு மிகவும் சுமுகமாக இருந்தது. பெனாசீர் பூட்டோ பிரதமராக இருந்தபோது மட்டும் தான்.

பர்வேஷ் முஷாரப்பின் வளர்ச்சியும் அவர் ஜனநாயகப் போர்வையில் சர்வாதி காரத்தை பாகிஸ்தானில் நிலைநிறுத்திய விதமும் பெனாசீர் பூட்டோவை வெளிநாடுகளுக்குத் துரத்தியது என்பது மட்டுமல்ல அவரது அரசியல் எதிரியான முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்பை நாடு கடத்தவும் செய்தது.

பஞ்சாப் மாகாணத்தில் செல்வாக்குப் பெற்ற நவாஸ் ஷெரிப்பும் சிந்து மாகாணத்தில் செல்வாக்குடைய பெனாசீர் பூட்டோவும் ஆரம்பத் திலேயே கைகோர்த்து செயல்பட்டு ஜன நாயகத்துக்குக் குரல் கொடுத்திருந்தால், நிச்சயமாக முஷாரப்பின் நிலைமை பல வீனப் பட்டிருக்கும்.

ஆனால் அதை விட்டு விட்டு எதிரியின் எதிரி நண்பன் என்று முஷாரப்புடன் பெனாசீர் பூட்டோ ரகசியப் பேச்சுவார்த்தை நடத்தியதும், முஷராப் அதிபராகத் தொடர்வது, தான் பிரதமராக வெற்றி பெறுவது என்று நடத்திய பேரமும்தான் இப்போது அவரது உயிருக்கே உலை வைக்கும் சம்பவத்துக்கு அச்சாரம் போட்டன.

பெனாசீர் பூட்டோ, முஷாரப்புடன் ரகசிய உடன்பாடு செய்து கொண்டிருக்கிறார் என்று பாகிஸ்தானில் பலர் நம்புகிறார்கள் என்பதை மறுக்க முடியவில்லை. சமீபகாலமாக பாகிஸ்தானில் நடக்கும் அரசியல் கேலிக் கூத்துகள் தீவிரவாதிகளின் கரங்களைப் பலப்படுத்தி இருப்பதில் எந்தவித ஆச்சரியமும் இல்லை. முஷாரப்பை அமெரிக்காவின் கைப்பாவை என்று தீவிரவாதிகள் கருதுவதில் இப்படி தவறு காணமுடியும்?

அமெரிக்க அதிகாரிகள் வெளிப்படுத்தி இருக்கும் தகவலின் படி தீவிரவாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக பாகிஸ்தானுக்கு சுமார் 5 பில்லியன் டொலர்கள் அளிக்கப்பட்டிருந்தன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தினரும் காவல்துறையினரும் தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக் கைகளில் உயிரிழந்திருக்கின்றனர்.

இவையெல்லாம் பாகிஸ்தானிய மக்கள் மத்தியில் முஷாரப் மீது எரிச்சலையும் கோபத்தையும் ஏற்படுத்தியி ருந்தால் ஆச்சரியம் இல்லை.

அமெரிக்காவை ஆதரித்ததனால்தான் பெனாசீர் பூட்டோவை கொலை செய்தோம் என அல்–கொய்தா தீவிரவாத இயக்கம் தற்போது உரிமை கோரியுள்ளது. இந்நிலை யில் தமக்கு அல்–கொய்தாவினால் ஆபத்து உள்ளதென ஏற்கனவே பெனாசீர் பூட்டோ தெரிவித்திருந்தார்.

அப்போது அமெரிக்கா பெனாசீர் பூட்டோ வின் அறிவிப்பை கவனத்தில் எடுத்திருந்தால் அவருக்கு பாதுகாப்பு வழங்க முஷாரப்பை வலி யுறுத்தியிருக்கலாம். ஆனால் அமெரிக்காவோ பாகிஸ்தானில் ஜனநாயகம் படுகொலை செய்யப்படுவதை பார்த்து ரசிக்கிறது என் பது தெளிவாக தெரிகிறது.

பாகிஸ்தான் அரசியல் தலைவர்களின் படுகொலையின் தொடர்ச்சியில் அடுத்த இலக்கு முஷாரப்பா? அல்லது நவாஷ் ஷெரிப்போ என்று தெரியவில்லை. பெனாசீர் பூட்டோவின் படுகொலையால் சிதைந்திருப்பது மக்களின் நம்பிக்கை மட்டுமல்ல முகமது அலி ஜன்னாவின் கனவுகளும் தான் .

# இந்தியாவுக்கு வெற்றி இலக்காக 499ஓட்டங்களை நிர்ணயித்தது ஆஸி.

(மெல்போர்ன்)

முதலாவது டெஸ்டில் இந்திய அணிக்கு வெற்றி இலக்காக 499 ஓட்டங்களை நிர்ணயித்துள்ளது அவுஸ்திரேலிய அணி.

அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்திய அணி 4போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது.

இத்தொடரின் முதலாவது போட்டி மெல்போர்ன் நகரில் கடந்த 26ஆம் திகதி முதல் நடை பெற்று வருகிறது.

இப்போட்டியில்முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி தனது முதலாவது இன்னிங்சில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 343 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி சகல விக்கெற்றுக்களையும் இழந்து 196 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது.

தொடர்ந்து முதலாவது இன்னிங்ஸில் 147 ஓட்டங்கள் முன்நிலை வகித்த அவுஸ்திரேலிய அணி 2ஆவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி நேற்றுமுன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெற் இழப்பின்றி 32ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஆட்டமிழக்காமல் ஹைடன் 22 ஓட்டங்களுடனும் ஜக்கீஸ் 10 ஓட்டங்களுடனும் களத்திலிருந்தனர்.

தொடர்ந்து 3ஆவது நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடி யஅவுஸ்திரேலிய அணி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்கள் ஹைடன் மற்றும் ஜக்கீஸ் நிதானமாகத் துடுப்பெடுத்தாடினார்கள்.

எனினும் அணி 83 ஓட்டங்களைப் பெற்ற போது மத்தியூஹைடன் 47 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

தொடர்ந்து களமிறங்கிய அணித்தலைவர் ரிக்கிபொண்டிங் 3ஓட்டங்களை மாத்திரம் பெற்ற நிலையில் ஹர்பஜனின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.



தொடர்ந்து 2விக்கெற்றுக்கள் வீழ்ந்த நிலையில் 3 ஆவது விக்கெற்றுக்கு ஜோடி சேர்ந்த ஜக்கீஸ் மற்றும் ஹஸி நிதானமாகத் துடுப்பெடுத்தாடினர்.

எனினும் அணி 139 ஓட்டங்களைப் பெற்ற போது ஜக்கீஸ் 51ஓட்டங்களுடன் கும்ளேயின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து ஹஸி ஜோடி சேர்ந்த கிளார்க் நிதானமாக துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார்.

ஹசியும் 36 ஓட்டங்களுடன் ஆர்.பி.சிங்கின் பந்தில் ஆட்டமிழந்து செல்ல அவுஸ்திரேலிய அணி 161 ஓட்டங்களைப் பெற்று 4 விக்கெற்றுக்களை இழந்தது.

ஹஸி ஆட்டமிழக்க சைமண்ட்ஸ்– கிளார்க்குடன் இணைந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடினார். இருவரும் இணைந்து 5ஆவது விக்கெற்




றுக்காக 72 ஓட்டங்களைப் பகிர்ந்த நிலையில் சைமண்ட்ஸ் 44ஓட்டங்களுடன் சகீர்கானின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேறினார்.

அடுத்து களமிறங்கிய கில்கிறிஸ்ட் நிதானமாக துடுப்பெடுத்தாடினார்.

மறுமுனையில் தனது டெஸ்ட் அரைச் சதத்தை கடந்த கிளார்க் 73ஓட்டங்களுடன் கும்ளேயின் பந்தில் ஆட்டமிழந்து சென்றார். கிளார்க் ஆட்டமிழக்கும்போது அவுஸ்திரேலிய அணி 6விக்கெற்றுக்களை இழந்து 288ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் கில்கிறிஸ்டுடன் இணைந்த ஹொக் சிறப்பாக துடுப்பெடுத்தாடினார். எனினும் மறுமுனையில் கில்கிறிஸ்ட் 35 ஓட்டங்களுடன் ஹர்பஜனின் பந்தில் ஆட்டமிழந்து அரங்கு திரும்பினார்.

தொடர்ந்து ஹொக்குடன் இணைந்த பிரட்லி சிறப்பாக துடுப்பெடுத்தாட அவுஸ்திரேலிய அணி 7விக்கெற்றுக்களை இழந்து 351 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அணித் தலைவர் ரிக்கிபொண்டிங் அறிவித்துள்ளார்.

இந்திய அணிக்கு 499ஓட்டங்கள் வெற்றி இலக்காக நிர்ணயித்தார். துடுப்பாட்டத்தில் கிளார்க் 73 ஓட்டங்களையும் ஜக்கீஸ் 51 ஓட்டங்களையும் ஹைடன் 43, சைமண்ட்ஸ் 44ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இந்திய அணி சார்பாக ஹர்பஜன்சிங் 3 விக்கெற்றுக்களையும் கும்ளே 2 விக்கெற்றுக்களையும் சகீர்கான் மற்றும் ஆர்.பி. சிங் தலா 1 விக்கெற்றையும் வீழ்த்தினர். தொடர்ந்து 499ஓட்டங்கள் வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெற் இழப்பின்றி 6 ஓட்டங்களை பெற்றிருந்தது. இதில் ஜபார் 2 ஓட்டத்துடனும் டிராவிட் 3 ஓட்டத்துடனும் களத்திலிருந்தனர்.

4ஆவது நாள் ஆட்டம் இன்றாகும். இந்திய அணி வெற்றிபெற துடுப்பாட்ட வீரர்கள் திறமையை வெளிப்படுத்துவார்களா அல்லது அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் பலிக்கடா ஆவார்களா? பொறுத்திருந்து பார்ப்போம்.

# வலுவான நிலையில் மேற்கிந்தியதீவுகள் அணி

(போர்ட் எலிசபெத்)

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் சந்தர்ப்போல் சதம் அடிக்க மேற்கிந்தியத் தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 408 ஓட்டங்களை எடுத்தது.

தென் ஆபிரிக்கா சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத்தீவு அணி 2இருபது–20 , 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடுகிறது.

முதல் டெஸ்ட் போர்ட் எலிசபெத்தில் நடக்கிறது. இப்போட்டயில்மேற்கிந்தியத் தீவுகள் முதல் நாள் ஆட்டநேர முடிவில் முதலாவது இன்னிங்ஸில் 4விக்கெற்றுக்களை இழந்து 281 ஓட்டங்களை எடுத்திருந்தது. சந்தர்ப்போல் (43), பிராவோ(0) ஆட்ட மிழக்காமல் இருந்தனர்.

நேற்றுமுன்தினம் இரண்டாவது நாள் ஆட்டம் நடந்தது. வேகத்தில் மிரட்டிய நிட்னி, பிராவோ (12) மற்றும் ராம்தின்(1) ஆகியோரை விரைவில் வெளியேற்றி அசத்தினார்.

அடுத்து வந்த சம்மி, சந்தர்ப்போலுக்கு நல்ல ஒத்துழைப்பு தந்தார். 38ஓட்டங்கள் எடுத்த நிலையில் துடுப்பெடுத்தாடிய இவர் டிவிலியர்சின் துல்லிய 'திரோ'வுக்கு ஆட்டமிழந்தார். ஜெரோம் டெய்லர் 9 ஓட்டங்கள் எடுத்தார். மறுமுனையில் அசத்தலாக சந்தர்ப்போல் டெஸ்ட் அரங்கல் 17 ஆவது சதம் கடந்தார்.

இவர் 12 பௌவுண் டரிகள் உட்பட 104 ஓட்டங்கள் எடுத்தார். மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 408 ஓட்டங்களுக்கு சகல விக்கெற்றுக்களையுமிழந்தது. தென் ஆபிரிக்கா சார்பில் நிட்னி ,நெல் ஆகியோர் தலா 3விக்கெற்றுக்களை வீழ்த்தினர்.

இதையடுத்து களமிறங்கிய தென் ஆபிரிக்காவுக்கு பவெல் முதல் ஓவரிலே அதிர்ச்சி அளித்தார். இவர் ஆரம்ப வீரர் கிப்சை 'டக்' அவுட்டாகினார். அதிரடியாக விளையாட முற்பட்ட அணித் தலைவர் ஸ்மித் 28 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் நேற்றுமுன்தினம் 2ஆம் நாள் ஆட்ட நேரமுடிவில் தென் ஆபிரிக்கா 34 ஓவர்கள் முடிவில் 5விக்கெற் இழப்புக்கு 122 ஓட்டங்கள் எடுத்திருந்தது.


**சாதனை சமன்:**

இப்போட்டியில் அபாரமாக துடுப்பொடுத்தாடிய மேற்கிந்திந்திய அணியின் முன்னாள் தலைவர் சந்தர்ப்போல் 50 ஓட்டங்களை எடுத்த போது டெஸ்டில் தொடர்ந்து அதிகமுறை அரைச் சதம் கடந்தவீரர்கள் வரிசையில் முதலிடத்தை சக நாட்டு வீரர் எவர்டன் வீக்ஸ் மற்றும்ஸிம்பாவேயின் ஆன்டிபிளவருடன் பகிர்ந்து கொண்டார்.



7 ஆவது முறையாக 50அல்லது அதற்கு மேலான ஓட்டங்களைஎடுத்து சாதனைபடைத் துள்ளார். (5)

# பங்களாதேஷூடனான 2ஆவது போட்டியில் 'டக்-வேத் லூயிஸ்' முறையில் நியூ.வெற்றி



(நைபியர்)

ஹவ் மற்றும் புல்டன் சிறப்பான துடுப்பாட்டத்தில் பங்களாதேஷ் உடனான இரண்டாவது போட்டியிலும் டக் வேத் லூயிஸ் முறையில் 102 ஓட்டங்களால் வெற்றிபெற்று நியூசிலாந்து அணி தொடரை கைப்பற்றியது.

நியூசிலாந்திற்கு சுற்றுப்பயணம்மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது.

முதலாவது போட்டியில் நியூசிலாந்து 6 விக்கெற்றுக்களால் வெற்றிபெற்ற நிலையில் இரண்டாவது போட்டி நேற்று நைபியரில் நடை பெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய நியூசிலாந்து அணி ஹவ், புல்டன் மற்றும் ஜேக்கப் ஓரமின் சிறப்பான அரைச் சதங்களுடன் நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 5விக்கெற்றுக்களை மாத்திரமிழந்து 335 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஹவ் 74ஓட்டங்களையும் புல்டன் 83 ஓட்டங்களையும் ஜேக்கப் ஓரம் 55ஓட்டங்களையும் ஸ்ரைரில் 41 ,மக்குலம் 35 மற்றும் டெய்லர் 34 ஆகியோர் முறையே ஓட்டங்களைப் பெற்றனர்.

அப்துல் ரஸாக் 2 விக்கெற்றுக்களையும் பர்காத் ரிஷா மற்றும் மோட்டஷா ஆகியோர் தலா 1விக்கெற்றையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 336 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ்அணி மில்ஸின் துல்லியமான பந்துவீச்சினால் 43 ஓவர்களில் 6 விக்கெற்றுக்களை இழந்து 181 ஓட்டங்களை மாத்திரம் பெற்றிருந்தபோது மழை குறுக்கிட்டதால் ஆட்டத்தை தொடர முடியாத நிலையில் டக்–வேத் லூயிஸ் முறையில் 102 ஓட்டங்களால் தோல்வியுற்றது.

இதில் தாமிம் இக்பால் 43 ஓட்டங்களையும் அகமெட் 54 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து அணிசார்பாக மில்ஸ் 4விக்கெற்றுக்களையும் விக்டோரி 2 விக்கெற்றுக்களையும் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக 83 ஓட்டங்கள் அடித்து நியூசிலாந்து அணியின் வெற்றிக்கு வழிசமைத்த புல்டன் தெரிவானார். இவ் வெற்றியுடன் 3போட்டிகள் கொண்ட தொடரில் 20 என்ற கணக்கில் தனதாக்கியது நியூசிலாந்து. (5)

# இங்கிலாந்தில் குடியேற இம்ரான் பர்ஹத் முடிவு

(கராச்சி)

பாகிஸ்தான் கிரிக்கெற் வீரர் இம்ரான் பர்ஹத் பிரிட்டன் குடியுரிமை பெற முடிவு செய்துள்ளார். பாகிஸ்தானில் தொடர்ந்து கிரிக்கெற் விளையாட இனி வாய்ப்புக்கள் கிடைக்காது என்பதால் இந்த முடிவை மேற்கொண்டிருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இம்ரான் பர்ஹத்தின் மனைவி பிரிட்டன் நாட்டைச் சேர்ந்தவராவார். எனவே தனது குடும்பத்தினருடன்ஆலோசித்த பின்னர் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் பிரிட்டன் குடியுரிமை மற்றும்பிரிட்டன் பாஸ்போட் பெற விண்ணப்பிக்க இருப்பதாக பர்ஹத் தெரிவித்துள்ளார். இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டு சபைக்கு போட்டியாக தொடங்கப்பட்டுள்ள இந்திய கிரிக்கெற் லீக்கில் இணைந்து இம்ரான் பர்ஹத் விளையாடியதைத் தொடர்ந்து அவர் பாகிஸ்தான் அணிக்காக விளையாட அந்நாட்டு கிரிக்கெற் சபை தடைவிதித்துள்ளது.

எனவே பாகிஸ்தானை விட்டு வெளியேறி பிரிட்டனில் குடியேறுவது தவிர தனக்கு வேறு வழியில்லை என்று பர்ஹத் தெரிவித்துள்ளார். (அ-5)

# அமெரிக்காவை ஆதரித்ததால் பெனாசீரை கொன்றோம்

## அல்-கொய்தா தீவிரவாதிகள் அறிவிப்பு

**அமெரிக்காவை ஆதரித்ததால் பெனாசீர் பூட்டோவை நாம் படுகொலை செய்தோம் என சர்வதேச பயங்கரவாத இயக்கமான அல்-கொய்தா அறிவித்துள்ளது.**

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ நேற்று முன்தினம் மாலை ராவல் பிண்டியில் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த போது 2 மர்ம நபர்கள் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டார்.

பெனாசீர் பூட்டோவைபடுகொலை செய்தது யார் என் பது நேற்று காலைவரை மர்மமாக இருந்தது. நேற்று முன்தினமிரவு எந்த தீவிரவாத இயக்க மும் பெனாசீர் படுகொலைக்கு பொறுப்பு ஏற்க வில்லை. இந் நிலையில் நேற்று அதிகாலை "பெனாசீரை படுகொலை செய்தது நாங்கள் தான்" என்று சர்வதேச பயங்கரவாதி பின்லேடனின் அல்-கொய்தா இயக்கம் பொறுப்பு ஏற்றுக் கொண்டது.

இத் தகவலை அல்-கொய்தா இயக்கம் தங்களது இணையத் தளங்களில் வெளியிட்டது. ஆங்கிலம் மற்றும் அரபு மொழியில் அவை வெளியிடப்பட்டிருந்தன. "பெனாசீரை ஏன் கொலை செய்தோம்?" என்று அதில் அல்-கொய்தா தீவிரவாதிகள் விளக்கம் தெரிவித்திருந் தனர்.

அல்-கொய்தா வெளியிட்டிருந்த அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது,

பெனாசீர் அமெரிக்காவுடன் கை கோர்த்துக் கொண்டு செயல்பட்டார். அமெரிக்கா துணையுடன் எங்களை ஒழித்துக்கட்ட போவதாக சபதம் செய்தார். எனவேதான் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

அவரை கொலை செய்ததன் மூலம் பாகிஸ்தானில் இருந்த அமெரிக்காவின் மிகப்பெரிய, விலை மதிப்பில்லாத சொத்தை துண்டித்து நிறுத்திவிட்டோம் பெனாசீரை கொல்ல வேண்டும் என்ற முடிவை அல்-கொய்தாவின் மூத்த தலைவர் அய் மன்-அல்-ஜவகரி எடுத்தார். அதன்படி உடனடி யாக தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு அல்-கொய்தா வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது. இந்த அறிவிப்பு அல்-கொய்தாவின் ஆப்கானிஸ்தான் கொமாண் டர் அல்-யாஜீத் பெயரில் வெளியிடப்பட்டுள்ளது. (5)



## என் உயிருக்கு ஆபத்து முஷாரப் பாதுகாப்பு தரவில்லை;

### அமெ.நிருபருக்கு பெனாசீர் அறிவித்திருந்தார்

(வாஷிங்டன்)

பெனாசீர் பூட்டோவுக்கு தீவிரவாதிகள் மிரட்டல் இருந்த நிலையிலும் அவருக்கு முஷாரப் அரசு உரிய பாதுகாப்பு வழங்காததால்தான் அவர் கொல்லப்பட்டு இருக்கிறார். தனது உயிருக்கு ஏற்பட்ட ஆபத்து குறித்து பெனாசீர் பூட்டோ தனது நண்பரும் அமெரிக்க சி.என்.என். நிருபருமான ஒல்ப் பினிட்சருக்கு கடந்த அக்டோபர் மாதம் ஒரு இ-மெயில் அனுப்பி இருக்கிறார். அதில் கூறியிருப்பதாவது:-

நான் பாகிஸ்தானில் பாதுகாப்பற்ற நிலையை உணர்கிறேன். முஷாரப் எனக்கு உரிய பாதுகாப்பு தரவில்லை. எனக்கு வழங்கப்பட்டுள்ள கார் பாதுகாப்பானதாக இல்லை. எனது காரை சுற்றி 4 பக்கத்திலும் பொலிஸ் பாதுகாப்பு வாகனம் வரவேண்டும் எந்த ஏற்பாடும் செய்யவில்லை. வெடிகுண்டை செயலிழக்க செய்யும் ஜாமர் கருவி பொருத்தவில்லை.

வேறு வழி தெரியவில்லை. பாதுகாப்பற்ற நிலையில் தான் பயணம் செய்கிறேன். எனது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் அதற்கு முஷாரப் தான் பொறுப்பு. இவ்வாறு அந்த இ-மெயில் கடிதத்தில் பெனாசீர் பூட்டோ குறிப்பிட்டுள்ளார்.(5)

## கடந்த 60 ஆண்டுகளில் கொலை செய்யப்பட்ட முக்கிய தலைவர்கள்

கடந்த 60 ஆண்டுகளில் உலகம் முழுவதும் 17க்கும் மேற்பட்ட முக்கிய தலைவர்கள் கொல்லப்பட்டனர். அவர்கள் விபரம் வருமாறு,

1948-ஜன 30 இந்தியாவின் தேசத்தந்தை மகாத்மா காந்தி சுட்டுக்கொல்லப்பட்டார்.

1951- அக். 16 பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் லியாகத் அலிகான் ஒரு பொதுக் கூட்டத்தில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1963-அமெரிக்க ஜனாதிபதி ஜான் எப்.கென்னடி பேரணியில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1975-ஆக 15-பங்களா தேசத்தை உருவாக்கிய தலைவர் ஷேக் முஜிபுர் ரகுமான் இராணுவ தள பதிகளின் துப்பாக்கிக்கு பலியானார்.

1981-மே 30-பங்காள தேச அதிபர் ஜியாவுர் ரகுமானை இராணுவ அதிகாரிகளே சுட்டுக் கொன்றனர்.

1981-அக் 6-எகிப்து அதிபர் அன்வர்சதாத் தீவிரவாதிகளின் துப்பாக்கி குண்டுக்கு பலியானார்

1984-அக், 31-டெல்லியில் இந்திரா காந்தி அவரது பாதுகாவலர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1986 -பெப் 28-சுவீடன் பிரதமர் ஓலாம் பால்மே கொலை.

1991-மே 21 - ராஜீவ் காந்தி ஸ்ரீபெரும் புதூரில் மனித வெடிகுண்டுக்கு பலியானார்.

1991-நவ 4-இஸ்ரேல் பிரதமர் ராபின் பேரணியில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

1993-மே- இலங்கையின் 3ஆவது ஜனாதிபதி பிரேமதாசா தற்கொலை படை தாக்குதலில் கொல்லப்பட்டார்.

2001-ஜுன் 10-காங்கோ அதிபர் லாரண்ட் கபீலா அவரது பாதுகாவலரால் கொல்லப்பட்டார்.

2001-ஜுன் 1- நேபாள மன்னர் பிரேந்திரா, ராணி ஜஸ்வர்யா, இளவரசர் நிரஞ்சன் ஆகியோர் இளவரசர் திபேந்திராவால் சுடடுக் கொல்லப்பட்டனர்.

2003-மார்ச் 12-செர்பியா பிரதமர் சோரன் ஜின்டிக் சுட்டுக்கொலை.

2003-செப் 10-சுவீடன் வெளியுறவு மந்திரி அன்னா லிண்ட் குத்தி கொலை செய்யப்பட்டார்.

2005-பெப் 14-லெபான் பிரதமர் ரபீக்ஹரார் பெய்ரூட் நகரில் குண்டுவீசி கொலை செய்யப்பட்டார்.

2007-டிச.27 பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்டார். (5)

## பெனாசீர் பூட்டோ படுகொலை; நவாஷ் ஷெரிப் அதிர்ச்சியில்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்டது மற்றொரு முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரிப்புக்கு கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. தானும் பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார். இஸ்லாமாபாத்தில் அவர் பங்கேற்ற கூட்டத்திலும் துப்பாக்கி சூடு நடந்தது.

இஸ்லாமாபாத்தில் பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) கட்சி சார்பில் நேற்று முன்தினம் காலை பொதுக்கூட்டம் நடந்தது. இதில் நவாஸ் ஷெரிப் பேசிக்கொண்டு இருந்த போது மாற்று கட்சியை சேர்ந்த சிலர் கூட்டத்தினர் மீது சரமாரியாக துப்பாக்கி சூடு நடத்தினர்.

இதில் நான்கு பேர் கொல் லப்பட்டனர். இந்த சம்பவத்துக்கு தொடர்ச்சி யாக தான் ராவல்பிண்டி நகரில் பெனாசீர் பூட்டோ சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் நடந்தது. பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்ட செய்தி கேட்ட தும் நவாஸ் ஷெரிப் மிகுந்த அதிர்ச்சி அடைந்தார். உடனடியாக ராவல்பிண்டி நகருக்கு புறப்பட்டு சென்றார். மருத்துவ மனையில் பெனாசீர் பூட்டோ உடல் அருகே சிறிது நேரம் கடும் சோகத்துடன் அமர்ந்து இருந்தார். அப்போது அவர் கூறியதாவது,

பெனாசீர் பூட்டோ சுட்டுக்கொல்லப்பட்டது. பாகிஸ் தான் வரலாற்றிலேயே மிகவும் துயரமான சம்பவம். இதுபற்றி, அதிபர் முஷாரப்புக்கு தெரியுமா நானே பாதுகாப்பற்ற சூழ்நிலையில் தான் இருக்கிறேன். போதிய பாதுகாப்பை முஷாரப் தருவாரா? பெனாசீர் பூட்டோவின் மறைவு அவரது கட்சிக்கு மட்டுமல்ல, எனது கட்சிக்கும் சோகமான விஷயம் தான். பாகிஸ்தானில் எதுவுமே கட்டுப்பாட்டில் இல்லை. கட்டுப்பாடு இருந்து இருந்தால், பெனாசீர் பூட்டோ கொல்லப்பட்ட சம்பவம் நடந்து இருக்காது.



இதற்கு முஷாரப் தான் பதில் சொல்ல முடியும். தனது பாதுகாப்புக்கு கோடிக்கணக்கில் செலவழித்த முஷாரப், பெனாசீர் பூட்டோ பாதுகாப்புக்கும் சிறி தளவு செலவுசெய்து இருக்கலாம் இவ்வாறு நவாஸ் ஷெரிப் கூறினார்.

## உலக தரிசனம்

## துருக்கி நாட்டில் பூகம்பம்

(அங்காரா)

துருக்கி நாட்டில் தலைநகர் அங்காராவில் நேற்று முன்தினம் நள்ளிரவு உள்ளூர் நேரம் 1.47 மணிக்கு பூகம்பம் ஏற்பட்டது. அதன் வீரியம் ரிக்டர் அளவில் 5.5 இருந்தது. அதன் மையம் தலைநகரில் இருந்து 89 கி.மீ.தூரத்தில் உள்ள பாலா நகரில் இருந்தது.

இதே நகரில்தான் கடந்த வாரம் 5.7 ரிக்டர் அள வுக்கு பூகம்பம் தாக்கியது. இதில் ஒரு மசூதி இடிந்து விழுந்தது. 20 வீடுகள் சேதம் அடைந்தன. நேற்று முன்தினம் ஏற்பட்ட பூகம்பத்தில் உயிர்ச் சேதம் எதுவும் இல்லை.

துருக்கி நாட்டில் பூகம்பம் அடிக்கடி ஏற்படுவது வழக்கம் தான் என்ற போதிலும் தலைநகர் அரிதாகவே பூகம்பம் தாக்கும். (5)

## உண்மையிலேயே தலை சுற்றுகிறது

(ஹாங்கொங்)

நமக்கெல்லாம் நின்றபடி சுற்றினாலே தலை சுற்றும், ஆனால் ஜப்பானைச் சேர்ந்த 18வயது



இளைஞரான எய்ச்சி ஓனோ என்பவரோ தலை கீழாக நின்றபடியே சுற்றுகிறார்.

அதுவும் அருகே பாலே நடனத்தில் ஈடுபட்டிருக்கும் பெண்ணுக்கு நிகராக ஹொங்கொங்கில் உள்ள ஒரு ஷாப்பிங் மாலில்தான் இந்தக் காட்சி. இப்படி ஒரு நிமிடத்தில் 101 முறை சுற்றியதுதான் கின்னஸ் உலக சாதனையாக இருந்து வருகிறது.

வரும் புத்தாண்டில் இதை முறியடித்து 130 தடவை சுற்றி புதிய சாதனை படைக்க இவர் திட்டமிட்டுள்ளார். என்ன தலை சுற்றுகிறதா? (5)

## பனித்திரை

(பெய்ஜிங்)

சீனாவில் இப்போது கடும் பனிக்காலம். எங்கு பார்த்தாலும் பனி கொட்டி, தரையே தெரியாமல் பஞ்சு போர்த்தியது போல பனி படர்ந்து காணப்படுகிறது.

தலைநகர் பீஜிங் அருகே உள்ள மியுன் சுற்றுலாப் பகுதி இது. அங்கு கொட்டிக்கொண்டிருந்த அருவி இப்போது வெப்பநிலை பூஜ்யம் டிகிரிக்கு கீழ் நிலவுவதால் பனித்திரை போல காட்சி தருகிறது. ஏதோ மெழுது வர்த்தி உருகி வழிவது



போலத் தெரியும் பனி நீர்வீழ்ச்சியின் அழகை இளம்பெண்கள் இருவர் ரசிக்கின்றனர். (5)

## குடிபோதையில் சிதைவடைந்த ஈரலை பழைய நிலைக்கு கொண்டுவரலாம்

### அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிப்பு

அளவுக்கதிகமான குடிபோதை மற்றும் வைரஸ் தொற்று என்பனவற்றால் சிதைவடைந்து வரும் ஈரலை பாதிப்பிலிருந்து மீட்டெடுத்து பழைய நிலைக்குக் கொண்டுவர முடியுமென அமெரிக்க ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஈரலின் மேற்பரப்பில் ஏற்படும் சிதைவை ஊக்குவிக்கும் முக்கிய புரதமூலக் கூறொன்றை தடை செய்வதன் மூலம் இப்பிரச்சினைக்கு முடிவு கட்டலாம் என இந்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இந்த புதிய அணுகுமுறையானது நுரையீரல் பிரச்சினைகள் மற்றும் எரிகாயங்கள் என்பன வற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கும் பெரிதும் உதவுவதாக அமையும் என்று கூறப்படுகிறது.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் சான் டயகோ மருத்துவ பாடசாலையின் ஆராய்ச்சியாளர்கள் தமது ஆராய்ச்சி குறித்து விபரிக்கையில், "ஆர்.எஸ்.கே" என அழைக்கப்படும் புரத மூலக் கூறுகளைத் தடை செய்வதன் மூலம் தசைநார்களில் புண் தோன்றுவதை தடுக்க முடியும் எனத் தெரிவித்தனர்.

"ஆர்.எஸ்.கே" புரத மூலக்கூறானது இயற்கையாக உடலின் குணப்படுத்தும் செயற்கிர மத்தின் ஒரு அங்கமாக வெளியிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இது தொடர்பில் மேற்படி ஆய்வுக்கு தலைமை தாங்கிய கலாநிதி மார்டினா பக் விபரிக்கையில், இந்த சிகிச்சை முறைமையானது ஏற்கனவே சிதைவுக்குள்ளான ஈரலை பழைய நிலைக்குத் திருப்ப உதவும் என்பது தமது ஆராய்ச்சிகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளதாக தெரிவித்தார். (5)

சண்டை செய்ய விரும்புகிறவனுக்கு ஒவ்வொரு வேலியிலும் கம்பு தென்படும்

-இங்கிலாந்து

வலம்புரி

# மேர்வின் சில்வாவுக்கு நேர்ந்த கதி அனுபவப் பாடமாக அமையட்டும்

இலங்கை ரூபாவாஹினி கூட்டுத்தாபனத்துக்குள் நுழைந்து செய்திப் பணிப்பாளரை தாக்கிய பிரதி அமைச்சர் மேர்வின் சில்வாவை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனப்பணியாளர்கள் கூட்டாக ஒன்றுசேர்ந்து கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

அமைச்சர் மேர்வின் சில்வா முன்பும் ஒருதடவை சக்தி தொலைக்காட்சி நிலையத்திற்குச் சென்று கண்டபாட்டில் கெட்டுவார்த்தைகளால் தூற்றித்தள்ளினார். அவரின் இந்தச் செயற்பாட்டைப் பார்த்தவர்கள் ஊர்ச்சண்டியன்போல் ஒரு அமைச்சர் நடந்து கொண்டதாக விமர்சித்தனர்.

சக்தி தொலைக்காட்சி நிறுவனம் தொடர்பில் தமிழினத்தையே கேவலப்படுத்தும் வகையில் பேசிய அமைச்சர் மேர்வின் சில்வா மீது, அரசு உரிய நடவடிக்கை எடுத்திருந்தால்; ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திலும் மேர்வின் சில்வா ஊர்ச் சண்டித்தனம் காட்டியிருக்கமாட்டார்.

ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் செய்திப் பணிப்பாளரை கூட்டுத்தாபனத்தின் தலைவர் அறைக்கு இழுத்துச் சென்ற மேர்வின் சில்வாவின் செயலானது ஊடகவியலாளர்களை ஒட்டுமொத்தமாக அவமதிக்கும் செயலாகும்.

எனினும் கூட்டுத்தாபனத்தின் பணியாளர்கள் ஒன்றுசேர்ந்து தமது செய்திப்பணிப்பாளரை காப்பாற்றிய விதம் பாராட்டப்படவேண்டும்.

அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், ஒரு அமைச்சர் தனது பதவிக்கும் பொறுப்பிற்கும் ஏற்றவகையில் நடந்துகொள்ளாவிட்டால், இப்படித்தான் தீர்ப்பு இருக்கும் என்பதை ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினர்களும், அமைச்சர்களும், அரச உயர் அதிகாரிகளும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

ஊடகம் என்பது ஜனநாயகத்தைத் தாங்கும் நான்கு தூண்களில் ஒன்றென்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மை. இந்நிலையில் அமைச்சர் மேர்வின் சில்வா ரூபவாஹினிக் கூட்டுத்தாபன செய்திப் பணிப்பாளரை தாக்கிவிட்டுச் சென்றிருந்தால், அது ஊடகத்தின் 'காவல் பணியை' 'ஜன நாயகத் தாங்குநிலையை' முற்றுமுழுதாக இழந்திருக்கும்.

ஆனால் அதிர்ஷ்டவசமாக ரூபவாஹினிக் கூட்டுத்தாபன பணியாளர்கள் கணப்பொழுதில் ஒன்று திரண்டு அமைச்சர்-அரசு என்ற பயங்களைக் கடந்து; அரச வேலைக்கு ஆபத்து வந்துவிடுமோ என்ற ஏக்கத்தைத் துறந்து; அமைச்சர் மேர்வின் சில்வாவுக்குச் செய்த உருத்திரா அபிஷேகம் ஊடகத்துறையை -ஊடகவியலாளர்களை காப்பாற்றிவிட்டது.

இதற்காக ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் சிங்களப் பணியாளர்களை ஊடக சமூகம் வாழ்த்தவும் பாராட்டவும் தயங்கக்கூடாது.

இதற்காக விண்ணப்பம்கோரி எனக்கொரு விருது தா! என்று பிச்சை ஏந்துவோருக்கு விருது வழங்கும் கேவலத்தை கைவிட்டு, அமைச்சர் என்று இம்மியும் பாராது துணிச்சலுடன் செயற்பட்டு, ஊடகத்துறையின் மரியாதையைக் காத்த, அந்த ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் பணியாளர்களுக்கு ஊடகம் சார்ந்த எல்லா விருதுகளும் வழங்கப்பட வேண்டும்.

2008-ல் இதனை செய்ய உலகம் உள்ளிட்ட ஊடக அமைப்புக்கள் முன்வரவேண்டும். இதுவே பொருத்தமான செயலாகும்.

# ஐ.தே.கவில் கருத்து முரண்பாடுகள் எம்.பிக்கள் நால்வர் ஜனவரியில் அரசுடன் இணைவர்

## அமைச்சர் மனோ விஜயரத்ன தகவல்

(கொழும்பு)

2008 ஆம் ஆண்டிற்கான நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொள்வர் என்று அமைச்சர் மனோ விஜயரத்ன தெரிவித்தார்.

பயங்கரவாதத்துக்கு எதிராக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகளில் நம்பிக்கை கொண்டும், ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகத்தின் மீது அதிருப்தியுற்றிருக்கின்ற ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வரே அரசாங்கத்துடன் ஜனவரியில் இணைந்து கொள்ளவிருக்கின்றனர் என்றும் அவர் சொன்னார்.

ஐ.தே.கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் ஐ.தே.கட்சி ஜனநாயகக் குழுவினர் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் வெளியான தகவல்கள் தொடர்பாக கேட்டபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தகவல் தருகையில், ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அண்மைக்கால நடவடிக்கைகளினால் கட்சிக்குள் கருத்து முரண்பாடுகள் நிலவுகின்றன. இதனால் ஐ.தே. கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் நால்வர் எம்முடன் இணைந்து செயற்படுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினர். இரு தரப்பினருக்கும் இடையிலான புரிந்துணர்வுக்கிணங்க பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களை குறிப்பிட முடியாதுள்ளது.

அரசாங்கத்திலிருந்து எதிர்க்கட்சிக்குச் சென்ற சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான மங்கள சமரவீர, சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் கொள்கைக்கு கட்சியில் முதலிடம் வழங்கப்படுகிறது.

இதனால் கட்சியின் கொள்கை நாளுக்கு நாள் மாற்றம் பெற்றுவருகிறது. இதற்கு ஒருபோதும் அனுமதியளிக்க முடியாது என்பதற்காகவே அந்த நால்வரும் அரசாங்கத்துடன் இணைந்து செயற்படுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளனர்.

அந்த நால்வரும் ஜனவரியில் அரசாங்கத்துடன் இணைந்து கொள்வார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

(அ-5)

# கோதுமைமா, உரம், எரிபொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த முடியாது-அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

கோதுமை மாவின் விலையேற்றத்தை தவிர்க்க முடியாது. எரிபொருள், கோதுமை மா, உரம், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலைகளை எக்காலத்திலும் அரசாங்கத்தால் கட்டுப்படுத்த இயலாது என்று வர்த்தக, சந்தைப்படுத்தல் அபிவிருத்தி, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் சேவைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

எதிர்வரும் சிங்கள -தமிழ் புத்தாண்டுக்கு முன்னதாக நியாயமான விலையில் பொருட்களை வழங்குவதற்கு அரசாங்கம் விசேட நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் கூறியதாவது,

உலகம் முழுவதும் பொருளாதாரத்திலும் பொருட்களின் விலையேற்றத்திலும் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்திய ஆண்டாக 2007 அமைந்துள்ளது.

இந்த ஆண்டில் எரிபொருள் 71 வீதத்தால் அதிகரித்துள்ளது. இதன் தாக்கம் பொருட்களின் விலைகளிலும் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 2003 ஆம் ஆண்டு இலங்கைக்கு தேவையான மசகு எண்ணெயை 838 மில்லியன் அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்ய முடியுமாக இருந்தது.

2007 ஆம் ஆண்டு அதனை 2500 மில்லியன் அமெரிக்க டொலருக்கு கொள்வனவு செய்யவேண்டிய நிலை உள்ளது. இதனடிப்படையில் எரிபொருள் மும்மடங்காக அதிகரித்துள்ளது.

உலகத்தின் எந்தப் பாகத்திலும் பொருட்களின் விலை குறையவில்லை. அதிகரித்தே உள்ளது. இவ்வாறான தொரு நிலையில் குறைந்த விலையில் பொருட்களை வழங்குவதற்கு அரசாங்கம் நியாயமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. உண்மையில் சில பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கின்றன. அதற்கு அரசாங்கத்தின் முயற்சியே காரணம்.

இந்த ஆண்டில் சீமெந்து விலை மூன்று தடவைகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. இனி மேலும் சீமெந்தின் விலையை அதிகரிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. 50 கிலோ கிராம் எடையுள்ள சீமெந்து பக்கெட் ஒன்றின் அதிகூடிய விலையாக 692 ரூபா நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதனை மீறி சீமெந்து தட்டுப்பாட்டை ஏற்படுத்த முயற்சித்தால், சீமெந்து இறக்குமதியை அரசாங்கம் மேற்கொள்ளும். இலங்கைச் சந்தையில் அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை. போதுமான அளவுக்கு அரிசி உள்ளது. பால் மா விலை இனி அதிகரிக்கப்படமாட்டாது. பிறிமா நிறுவனத்திற்கு எதிராக நான்கு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கு அனைத்து வர்த்தகர்களுக்கும் முடியும் அதற்கான சுதந்திரம் உள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் நடவடிக்கை அனுமதிக்க முடியாது. எதிர்க்கட்சியில் இருக்கின்றபோதும் நான் கூறிய கருத்துக்களை அரசாங்கத்தில் இருக்கும்போது கூறமுடியாது.

இந்த செய்தியாளர் மாநாட்டில் கூட்டுறவு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் நஜீப் ஏ.மஜீட், நுகர்வோர் அதிகார சபையின் தலைவர் ரூமி மர்சூக் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

(அ-5)

# நூல் வெளியீடும் 108 கலச அபிஷேகமும்

யாழ் கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் சபரீச ஐயப்ப சுவாமிக்கு நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு 108 கலச அபிஷேகம் நடைபெற்றபின் "ஹரிஹரசங்கம்ஐயப்பா" எனும் நூல் வெளியீடு ஆலய மண்டபத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து அடியார்கட்கு சக்தி பூசையும் நடைபெறவுள்ளது என தேவஸ்தானத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# பிராந்திய மதிப்புரைக் கூட்டம்

சர்வதேச லயன்ஸ் கழகத்தின் பிராந்தியம் 9இன் பிராந்திய தலைவரின் மதிப்புரைக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10மணிக்கு பிராந்திய தலைவர் லயன் க.மு.பத்மநாதனின் இல்லத்தில் (68,பொற்பதி வீதி,கொக்குவில் கிழக்கு) நடைபெறும். இக்கூட்டத்திற்கு வலயம் 17 இற்கு உட்பட்ட கொக்குவில், தீவகம்,சுன்னாகம் மற்றும் வலயம் 18இற்கு உட்பட்ட வவுனியா,மன்னார் ஆகிய கழகங்களை கலந்துகொள்ளுமாறு பிராந்திய தலைவர் லயன் க.மு.பத்மநாதன் கேட்டுள்ளார். (அ)

# டிசெம்பர் மாத நிவாரணம்

உலக உணவு திட்ட நலிந்த பிரிவுக்கான டிசம்பர் மாத நிவாரணத்திற்கான வழங்கல் கட்டளைகள் உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவ பிரிவினால் வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை வழங்கல் கட்டளைகளை பெற்றுக்கொள்ளாத ப.நோ.கூ.சங்கங்கள் இன்று சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு உலக உணவுத் திட்ட மாவட்ட முகாமைத்துவ பிரிவில் பெற்றுக் கொள்ளுமாறு திட்டப் பணிப்பாளர் ம.பிரதீபன் அறிவித்துள்ளார். (அ)

# நல்லூர்க் கோட்ட அதிபர்களின் பணிநயம் பாராட்டு விழா

நல்லூர் கல்விக் கோட்ட பாடசாலைகளில் அதிபராக பணியாற்றி 2007 ஆம் ஆண்டு சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பொ.கமலநாதன், வா.ஜெயரட்ணம், ரி.கிருஷ்ணகுமார், எஸ்.இரத்தினசிங்கம், பொ.நடராசா, திருமதி மா.வேதநாதன், திருமதி சி.விஸ்வலிங்கம், திருமதி த.கமலராஜா ஆகியோர்களுக்கான சேவைநலன் பாராட்டு விழா நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்கள் சங்கத்தால் இன்று முற்பகல் 10 மணிக்கு யாழ்.ஆனைப்பந்தி அ.மி.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளதாக நல்லூர் கல்விக் கோட்ட அதிபர் சங்கத் தலைவர் வே.ஞானகாந்தன தெரிவித்துள்ளார். (அ)

# வருடாந்த கலைவிழா

நீர்வேலி ஸ்ரீகணேசா முன்பள்ளியின் வருடாந்த கலைவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை முன்பள்ளி முன்றலில் பிற்பகல் 1.30மணிக்கு யாழ். அச்செழு சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் ச.வேலழகன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

விழாவில் பிரதம விருந்தினராக யாழ். சமூகஅபிவிருத்தி மன்றத் தலைவர் திருமதி ந.ஜெகதீசன் கலந்துகொள்ளவுள்ளார். அத்துடன் முன்பள்ளி சிறார்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (அ)

# ஆங்கில மொழி எழுத்துப்பரீட்சை

ஆங்கில மொழி வளத்திற்கான வள நிலையம் நடாத்தும் 2007 ஆம் ஆண்டிற்கான எழுத்துப் பரீட்சை ஜனவரி 31 ஆம் திகதி யாழ்.வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என ஆங்கில பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.சுந்தரமூர்த்தி அறிவித்துள்ளார். (எ-19)

# அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனேயே அமைச்சர் மேர்வின் சில்வா தாக்குதல்

## ஐ.தே.க. குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனே அமைச்சர் மேர்வின் சில்வா ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் புகுந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இத்தாக்குதல் தொடர்பாக பதிவு செய்த வீடியோ நாடாக்களை குற்றத் தடுப்பு பொலிஸார் பறிமுதல் செய்துள்ளனர். இதன் மூலம் அரசாங்கத்தின் ஆசீர்வாதம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடன் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டமையினால் எதுவிதமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது என்று அவர் மேலும் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும்போதே லக்ஸ்மன் கிரியெல்ல எம்.பி இவ்வாறு தெரிவித்தார். அவர் இங்கு மேலும் கூறியதாவது,

மாத்தறையில் இடம்பெற்ற கூட்டத்தில் ஜனாதிபதி முன்னிலையில் அமைச்சர் மேர்வின் சில்வா உரையாற்றும்போது ரணில், மங்கள, அநுரா ஆகியோரை கீழ்த்தரமான வார்த்தைகளால் விமர்சித்துள்ளார்.

இதனை ஒளி பரப்பினால்..தேசிய ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் கௌரவம் பாதிக்கப்படலாம் என்பதனாலேயே செய்திப்பிரிவினர் அதனைத் தவிர்த்துள்ளனர். இந்த உயர்ந்த செய்கைக்காக நன்றி கூறவேண்டும்.

மேர்வின் சில்வா அரசாங்கத்தின் முகவராக செயல்பட்டே இத்தாக்குதலை மேற்கொண்டார். அரசாங்கத்தின் ஆசீர்வாதத்துடனே செயற்பட்டதால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படமாட்டாது; தண்டனையும் வழங்கப்படமாட்டாது என்றார். (ச-5)

# புதுக்குடியிருப்புப் பகுதியில் விமானக் குண்டுவீச்சு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு, பிரமந்தர்குளம் பகுதியில் விமானப்படையினர் நேற்று நண்பகல் 12 மணியளவில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியுள்ளனர். பிரமந்தர்குளம் பகுதிக்குத் தெற்கே அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரங்களுக்கான ஒருங்கிணைப்பு நிலையத்தை இலக்கு வைத்து நண்பகல் 12 மணியளவில் ஜெட் விமானங்கள் மூலம் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தியதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் பிரியந்த வீரசிங்க தெரிவித்தார்.

தரை மற்றும் ஆகாய வழிகளில் பெறப்பட்ட தெளிவான உளவுத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகவும் இதனால் புலிகள் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகளின் சிரேஷ்ட தலைவர்கள் இந்த நிலையத்தில் ஒன்று கூடி சர்வதேச விவகாரங்கள் குறித்து கலந்துரையாடுவதாக கிடைத்த உளவுத் தகவல்களை அடிப்படையாகக்கொண்டே பல மாதங்கள் காத்திருந்து தருணம் பார்த்து இந்நிலையத்தின் மீது தாக்குதல் நடத்தியுள்ளதாக அவர் கூறினார். (எ-5)

## இராணுவச் சிப்பாயின் சடலம் கையளிப்பு

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளால் கைப்பற்றப்பட்ட இராணுவ வீரரின் உடலை கிளிநொச்சியில் பொறுப்பேற்ற சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அதனை ஓமந்தைக்கு எடுத்துச் சென்று படையினரிடம் நேற்று வெள்ளிக்கிழமை கையளித்தனர்.

யாழ்.கிளாலி முன்னரங்க நிலையில் கொல்லப்பட்ட தமது உறுப்பினர் ஒருவரது உடலை விடுதலைப்புலிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக கையளித்திருப்பதாக தேசிய பாதுகாப்பு ஊடகத் தகவல் மையம் அறிவித்துள்ளது. (எ-5)

## பூசாவிலிருந்து 60 பேர் விடுதலை

(கொழும்பு)

நுகேகொடச் சந்தியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தின் பின்னர் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதியில் கைது செய்யப்பட்டு பூசா முகாமில் தடுத்து வைக்கப்பட்ட 60 பேர் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# பெனாசீரின் உடல் நேற்று அடக்கம்

(ராவல்பிண்டி)

படுகொலை செய்யப்பட்ட பாகிஸ்தான் எதிர்க்கட்சித் தலைவர் பெனாசீர் பூட்டோவுக்குப் பல்லாயிரக்கணக்கானோர் அஞ்சலி செலுத்தினர்.

நாட்டின் தென்பகுதியிலுள்ள லார்கானாவில் பூட்டோவின் குடும்பக் கல்லறைத் தோட்டத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. பூட்டோவின் உடல் புதைக்கும் இடத்திற்கு எடுத்து வரப்பட்டபோது ஏராளமான ஆதரவாளர்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

மறைந்த தமது தலைவியின் நினைவாக கோஷங்களை எழுப்பிய அவர்கள், பாகிஸ்தான் அதிபர் முஷராப்பே அவரின் மறைவுக்குக் காரணம் என்று பழி சுமத்தினர். மற்றொரு முன்னாள் பிரதமரான தனது தந்தை சுல்பிகர் அலி பூட்டோவின் சமாதிக்கு அருகில் பெனாசீரின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

இதேவேளை பெனாசீர் பூட்டோ கொலை செய்யப்பட்டதையடுத்து பாகிஸ்தான் எங்கிலும் நடந்த வன்செயல்கள் மற்றும் மோதல்களில் குறைந்தது 24 பேர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

அவரது முக்கிய ஆதரவுத் தளமான சிந்து மாகாணத்திலேயே பெரும்பாலானோர் கொல்லப்பட்டிருக்கின்றார்கள். பூட்டோவின் இறுதி ஊர்வலத்திற்குப் பிறகு நிலைமை மேலும் மோசமாகலாம் என்று அஞ்சப்படுவதாக மாகாண உள்துறை அமைச்சர் கூறியுள்ளார்.

ஒழுங்கை நிலைநிறுத்த உதவுமாறு சிந்து மாகாண அரசாங்கம் இராணுவத்தைக் கோரியுள்ளது. கடைகள், கார்கள் மற்றும் அரசாங்கக் கட்டடங்கள் தீவைக்கப்பட்டதாக கராச்சியில் ஒரு மூத்த பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.நாடெங்கிலும் பல நகரங்கள் கிட்டத்தட்ட ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. (ச)

## இந்.பிரதமரின் இலங்கைப்...

இலட்சம் தமிழர்கள் அகதிக ளாகியிருக்கின்றார்கள். அதில் ஒன்றரை இலட்சம் பேர் உள்நாட்டிலேயே அகதிகள். 4 ஆயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர். ஆதரவற்ற பெண்குழந்தைகள் தங்கியிருந்த விடுதியைத் தாக்கி 61 பச்சிளம் மலர்களைச் சுட்டுப் பொசுக்கினர்.

முக்கிய சாலையை அடைத்து உயிர் காக்கும் மருந்துகளும் உணவுப் பொருள்களும் கிடைக்க முடியாத நெருக்குதல் தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. ஒரு கிலோ அரிசி ரூபா 150ற்கும் ஒரு மூட்டை சீனி ரூபா 10 ஆயிரத்துக்கும் விற்கப்பட்டது என்றால் நிலைமையைத் தெரிந்து கொள்ளலாம்.

இலங்கைத் தலைநகரில்தங்கும் விடுதியில் தங்கியிருந்த 379 தமிழர்களை ஒரே இரவில் வலுக்கட்டாயமாக தமிழர்கள் வாழும் பகுதிக்குத் துரத்தப்பட்டனர். இந்தியா உட்பட ஐ.நா. முதல்கொண்டு உலக நாடுகள் கண்டனம் தெரிவித்தன.

இலங்கை உச்ச நீதிமன்றமும் அரசின் நடவடிக்கைக்குத் தடை விதித்தது. சொந்த நாட்டில் அந்நாட்டு மக்கள் நடமாடுவதற்குக் கூடத் தடை என்றால் இந்தக் கொடுமையை என்னவென்று சொல்வது?

இந்நிலையில் இந்திய நாட்டுப் பிரதமர் இலங்கையின் சுதந்திர தின விழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்ளச் செல்கின்றார் என்றால் இதனை எந்த வகையிலும் நியாயப்படுத்தி விட முடியாது - ஏற்றுக் கொள்ளவும் முடியாது.

பிரதமர் முடிபை மறுபரிசீலனைசெய்ய வேண்டும். தமிழ்நாட்டு மக்களின் உணர்வை மதிக்க வேண்டும். இலங்கை நாட்டின் சுதந்திர நாளில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கக் கூடாது என்று வலியுறுத்தும் வகையில் வரும் 31 ஆம் திகதி காலை 11 மணிக்கு சென்னை - நினைவரங்கம் அருகில் (மெமோறியல் ஹோல்) வேண்டுகோள் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்துக் கொள்கின்றோம் என்றார். (எ-5)

## அமைச்சர்...

என்று கேள்வி எழுப்பிய நீதிபதி பொலிஸாரின் இது குறித்த அறிக்கையை நீதிமன்றம் ஏற்காது என்றும் கூறிவிட்டார்.

நடந்த சம்பவம் குறித்து பொலிஸ் அளிக்கும் அறிக்கையை நீதிமன்றம் ஏற்றால் நீதிமன்றத்தின் மீது பொதுமக்கள் கல் வீசுவார்கள் என்று நீதிமன்றத்தில் நீதிபதி தெரிவித்துள்ளார்.

இச் சம்பவம் குறித்த விசாரணையை ஜனவரி மாதம் 11 ஆம் திகதிவரை ஒத்திவைத்த நீதிபதி அனைத்துச் சந்தேக நபர்களையும் பொலிஸார் கைது செய்ய வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார். (ச)

## மடடக்...

சிறைச்சாலை அதிகாரிகளுடன் மேலதிகமாக பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு பதற்ற நிலைமையை தணித்தனர்.

இம் மோதல் சம்பவம் இடம்பெற்ற வேளை, ஏனைய கைதிகள் சிறைக்கூடங்களில் அடைத்து வைக்கப்பட்டிருந்ததாகவும் சிறைச்சாலை அதிகாரிகள் மோதலைத் தடுக்க முற்பட்டபோதும் அது பயனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-5)

## போர் நடவடிக்கைகளின் மூலம்...

நிறுத்தத்தை முழுமையாக அமுல்படுத்தி சகல இராணுவ நடவடிக்கைக ளும் பலாத்கார செயல்களும் நிறுத்தப்பட்டு எமது சகோதர சகோதரிகளின் துயரங்கள் உடனே முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண் டும் என பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்கின்றோம்.

மனிதாபிமான அடிப்படையில் மக்களின் வேதனைகள் அணுகப்பட வேண்டும் என்பதனையும் வலியுறுத்த விரும்புகின்றோம். யுத்த நிறுத்த நடவடிக்கை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.

ஏ-9, ஏ-15 பாதைகள் உடன் திறக்கப்பட வேண்டும். தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளைத் திருப்திப்படுத்தும் நிலையான- என்றும் நிலைக்கும் நியாயமான அரசியல் தீர்வைக் காணக்கூடிய சமாதானப் பேச்சு வார்த்தைகள் எதுவித தாமதமுமின்றி ஆரம்பிக்கப்பட வேண்டும்.

யுத்தமோ பலாத்கார நடவடிக்கைகளோ இந்த நாட்டில் சமாதானம் பிறக்க வழிவகுக்க மாட்டாது. வடக்குக் கிழக்கு மக்களைத் தொடர்ந்தும் புறக்கணிக்காது அந்த மக்களுக்கு அவசியமாகத் தேவைப்படும் உணவுப்பொருள்கள், மருந்து வகைகள் உட்பட சகலவற்றையும் அனுப்பவும் கல்வி மற்றும் அத்தியாவசிய வசதிகளை வழங்கவும் அரசாங்கம் கடமைப்பட்டுள்ளது என்பதால் அவற்றை உடனே வழங்க ஏ-9 வழிப் பாதை திறக்கப்படுவது முக்கியமானது.

இப்பொழுது அவர்களுக்கு வழங்கப்படும் கட்டுப்படுத்தப்படும் வசதிகள் அவர்களின் அடிப்படை மனித உரிமைகளை மீறும்செயலாகும். இந் நாட்டின் ஏனைய பகுதிகளில் வசிக்கும் மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளையும் வசதிகளையும் அவர்களுக்கும் வழங்குவது அரசாங்கத்தின் தலையாய கடமையாகும்.

பாரெல்லாம் பரவியிருக்கும் இந்து நிறுவனங்களும் இந்து மக்களும் இப்போது தந்து வரும் ஆதரவும் உதவியும் போதாது என்பதால் அவர்களும் எமது சகோதர சகோதரிகளின் பிரச்சினைகளில் அக்கறை எடுத்து மேலும் உதவ வேண்டும் என்றும் பகிரங்கமாக வேண்டுகோள் விடுக்க விரும்புகின்றோம். (ஏ)

## முகமாலை...

கொல்லப்பட்டுள்ளார். வவுனியா நரிக்குளம் பகுதியை படையினர் நேற்று முன்தினம் கடுந்தாக்குதல் மூலம் மீட்டுள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது. இதன்போது ஐந்து புலிகள் கொல்லப்பட்டுள்ளதாகவும் அமைச்சு கூறியுள்ளது. (எ-5)

## ஊடகவியலாளர்கள் ஆர்ப்பாட்டம்...

சென்றமையைக் கண்டித்தும் நேற்றுப் பாரிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றது.

பத்திரிகையாளர்சங்கங்கள்மற்றும்தொழிற் சங்கங்கள் இணைந்து ஏற்பாடு செய்திருந்த இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்திற்கு முன்பாக நேற்றுப் பிற்பகல் 12.30 மணியிலிருந்து சுமார் ஒரு மணித்தியாலமாக இடம்பெற்றது.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊடக சுதந்திரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் குண்டர்கள் எமக்கு வேண்டாம்.நாட்டையும் நாட்டு மக்களையும் சீர்குலைக்க எண்ணும் மேர்வின் போன்ற கல்வியறிவில்லாதவர்களை விரட்டியடியுங்கள். ஜனாதிபதியே குண்டர்களின் செயற்பாடுகளுக்கு வேலியிடுங்கள் போன்ற கோஷங்களை எழுப்பியதுடன் ஊடக சுதந்திரம் அனைத்து சுதந்திரங்களினதும் அடிப்படையாகும். ஊடக அடக்குமுறைகளை நிறுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளும் ஏந்தியிருந்தனர்.

இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடகத்துறை ஊழியர் தொழிற்சங்க சம்மேளனம், சுதந்திர ஊடக அமைப்பு, இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சங்கம் என்பவற்றின் உறுப்பினர்கள், பௌத்த பிக்குகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர். (எ-5)

## அதிகாரப் பரவலாக்கல்...

இனப்பிரச்சினைக்கு அதிகாரப் பரவலாக்கல் மூலம் தீர்வு காண அரசாங்கம் முனைந்தால் கடும் எதிர்ப்பினை தெரிவிக்க வேண்டிய நிலை ஏற்படும் என்று அரசாங்கத்தின் பிரதான பங்காளிக் கட்சியான ஜாதிக ஹெல உறுமயவின் மத்திய குழு உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க தெரிவித்தார்.

சமஷ்டி முறையிலான தீர்வை முன்வைக்கும் உரிமை அமைச்சர் திஸ்ஸ விதாரணவுக்குக் கிடையாது. சர்வகட்சிக்குழுவின் பொதுத் தீர்மானம் இறுதியானதாகும் என்றும் அவர் மேலும் கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது,

முதலில் விடுதலைப்புலிகளை அழித் தொழிக்க வேண்டும். அதன் பின்னர் ஜனநாயகத்தை வழங்கி அரசியல் தீர்வுத் திட்டத்தை முன் வைத்து அபிவிருத்திகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அமைச்சர் திஸ்ஸ விதாரண எந்த நாட்டிற்கும் விஜயம் செய்யலாம். ஆட்சி முறைமைகளை ஆராயலாம். ஆனால் சமஷ்டி முறையிலான தீர்வினை முன்வைக்க அவருக்கு அதிகாரமில்லை.

ஒற்றையாட்சியின் கீழ் அதிகாரப் பரவலாக்கலையே நாம் ஏற்றுக் கொள்வோம். அதற்கே மக்கள் ஆணையும் கிடைத்துள்ளது. இதனை மீற முடியாது.

அதேவேளை இலங்கையின் பெரும்பான்மையினமான சிங்கள மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யாத எந்தவொரு தீர்வுக்கும் இணங்கமாட்டோம்.

இதேவேளை ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையில் கூடிய அக் கட்சியின் அரசியல் சபை அரசாங்கம் அமைச்சர் திஸ்ஸ விதாரணவை முன்னிறுத்தி சமஷ்டி முறையிலான தீர்வை முன்வைக்க முனைவதை கடுமையாகக் கண்டித்துள்ளதோடு அவ்வாறான நடவடிக்கைகள் முன்வைக்கப்பட்டால் நாடு தழுவிய ரீதியில் எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தவும் தீர்மானித்துள்ளது.

விடுதலைப்புலிகள் பலவீனமடைந்துள்ளதோடு எமது படையினர் வன்னியைக் கைப்பற்றும் நிலைக்கு முன்னேறியுள்ளார்கள். இவ்வாறானதொரு சூழ்நிலையில் பேச்சுவார்த்தை, தீர்வு என முயற்சிப்பது படையினரின் மனோவலிமையினை பாதிக்கும்.

எனவே அரசாங்கத்தின் இம் முயற்சிகள் கைவிடப்பட வேண்டுமென வலியுறுத்தவும் ஜே.வி.பியினர் அரசியல் சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது. (எ-5)

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை அருமைநாயகம் (அருமை)



தையிட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை அருமைநாயகம் (அருமை) 27.12.2007 வியாழக்கிழமை பிரான்ஸில் காலமானார். அன்னார் பொன்னுத்துரை (இந்தியா), கெங்காதேவி (காலஞ்சென்றவர்) ஆகியோரின் மூத்த மகனும், யோகேஸ்வரியின் அன்புக் கணவரும், கோமதன், கீர்த்திகா, சஞ்சிகா ஆகியோரின் தந்தையும் சௌந்தரநாயகம், நர்கேஸ்வரன், பரமேஸ்வரன், அன்னலட்சுமி, இராசலட்சுமி ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்ற நடேசன், சின்னம்மா தம்பதிகளின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 03.01.2008 வியாழக்கிழமை சம்பற்றா (பரிஸ்) மயானத்தில் பிரான்ஸ் நேரப்படி காலை 9 மணிக்கு நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

T.P.
இந்தியா:- 0091442253005
பரிஸ்:- 0033060541786
0033872357509
0033634053955
லண்டன்:-00441159675190

தகவல்:
ந.சின்னம்மா,
அம்பாள் வாசா,
கே.கே.எஸ்.வீதி,
இணுவில் மேற்கு,
சுன்னாகம்.

(709)

A/L- 2010
(கலை, வர்த்தகப் பிரிவுகள்)
ஆரம்பம்:- ஜனவரி-5
சனி காலை 9 மணி
DMI
JAFFNA
(அனுமதிகளை தினமும் 9-1 மணிவரை பெறவும்)
(C-645)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பீறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தல் 29.12.2007 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.